பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 23 செவ்வாய்க்கிழமை 10.10.2023 கதிர் 333

# அடுத்த வருடமும் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு கூட்டு சூழ்ச்சி

## எதிர்க் கட்சித் தலைவர் தெரிவிப்பு

ஆளும் தரப்பு அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேர்தல்களையும் ஒத்திவைக்கத் தேவையான கூட்டுச் சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் இரகசியமாக செய்து வருவதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில்விசேடஊடகஅறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ள அவர், மேலும் தெரிவித்துள்ளதாக மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல்முறையைமாற்றியமைத்தல் என்ற ஜசிங் கேக் துண்டை நீட்டுவதன் மூலம் ஆளும் தரப்பு இதற்குத் தயாராகிறது. இது விசம் கலந்த கேக் துண்டாகும். அத்துண்டுக்காக இந்நாட்டு மக்கள் ஏமாற மாட்டார்கள்.

மக்கள் ஆணை இல்லாத ஆட்சியாளர்களுக்கு மக்களின் ஆசிர்வாதம் எந்த வகையிலும் கிடைக்கப்பெறாது. சந்தர்ப்பவாதமாக ஆட்சியைக் கைப்பற்றிய ஆட்சியாளர்கள், மக்களின் ஆணையையோ அல்லது விருப்பத்தையோ கருத்தில் கொள்ளாது ஆட்சியைத் தொடரச் சதி செய்கிறார்கள்.

பல்வேறு அரசியல் தந்திரங்களைப் பயன்படுத்திக் கொண்டு தனது ஆட்சியை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியின் முடிவு ஆபத்தானது என்பது முழு உலகமும் உணரக்கூடிய ☞ 2



## இது ரகசியம் அல்ல!

கொழும்பில் பொலிஸ் மா அதிபராகப் புதியவர் ஒருவர் இன்னமும் நியமிக்கப்படவில்லை. இருக்கும் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்ட இரண்டாவது பதவி நீடிப்புக் காலமும் முடிந்வடைந்து விட்டது. ஆனாலும் புதியவர் ஒருவர் நியமிக்கப்படவில்லை.

அடுத்த பொலிஸ் மா அதிபராகப் பதவியைப்பெறக்கூடியவர்கள்என்ற நிலையில் இருப்போரில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரின் ஆதரவைப் பெற்றவருக்கு எதிராக உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறிய குற்றச்சாட்டுகள் உள்ளன என்பதால் அவருக்குப் பதவி வழங்கப்படுவதற்குக் கடும் எதிர்ப்புள்ளது. இதனால்தர்ன நியமனம் இழுபறி நிலையில் இருக்கின்றது.

அது ஒருபுறம் இருந்தாலும் நான் இன்று சொல்ல வந்த விடயம் அதுவல்ல. பொலிஸ் மா அதிபரின் நியமனம் போன்றே ☞ 2

# துப்பாக்கியால் சுட்டு சந்தேகநபர் கைது

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம், வடமராட்சி பகுதியில் பல குற்றச்செயல்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபரை பொலிஸார் துப்பாக்கிச்சூடு மேற்கொண்டு பிடித்துள்ளனர்.

அல்வாய் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் மீதே பொலிசார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு கைது செய்துள்ளனர்.

பத்திற்கும் மேற்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்ற வகையில் நீண்ட ☞ 2

# தனிப்பட்ட தரவு பாதுகாப்பு அதிகார சபை உருவாக்கம்

## பணிப்பாளர் சபையை நியமித்தார் ஜனாதிபதி

நாட்டில் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட இலங்கை தனிப்பட்ட தரவு பாதுகாப்பு அதிகார சபைக்கு, தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

மாலைதீவுகளில் உள்ள ஏர்னஸ்ட் என்ட் யங் நிறுவனத்தின் மூத்த பட்டயக் கணக்காளரும், முன்னாள் ஆலோசகருமான அர்ஜுன ஹேரத் இதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அரச தரப்புச் சட்டத்தரணி நிசித் அபேசூரிய, ஜனாதிபதி சட்டத்தரணி சௌமியா அமரசேகர, டிஜிட்டல் சட்ட நிபுணரும் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்ட வரைவு குழுவின் தலைவருமான ஜயந்த பெர்னாண்டோ, ☞ 8

## பலஸ்தீனம் மீதான

# இஸ்ரேலின் தாக்குதலுக்கு இலங்கை அரசு கண்டனம்

பலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களை இலங்கை வன்மையாகக் கண்டிக்கிறது என்று அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இஸ்ரேலில் பல இலங்கையர்கள் பணி புரிகின்றனர். அயலுறவுத் துறை அமைச்சு அவர்களைச் சரியான இடங்களுக்கு அனுப்பி அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யவேண்டும்.

இலங்கையில் கணிசமான எண்ணிக்கையிலான இஸ்ரேலியர்கள் சுற்றுலாப் பயணிகளாகவும் பல்வேறு பணியாளர்களாகவும் உள்ளனர். அவர்கள் இஸ்ரேலுக்குத் திரும்புவதற்கு நாம் உதவ வேண்டும். இலங்கையில் ☞ 2

# முதல் 8 மாதங்களில் மட்டுமே 22 பில்லியன் ரூபாய் இலாபம்

## விமானத்துறை சேவை வழங்கல் ஊடாக கிடைத்தது

சேவை வழங்கல் ஊடாக எமது நாட்டு விமானத்துறை 2023 ஜனவரி முதல் ஒகஸ்ட் வரை 22 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டியுள்ளதாகவும் அதில் சுமார் 10 பில்லியன் ரூபாய் திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானப்போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் பல்வேறு நெருக்க ☞ 8

# நிகழ்நிலை காப்புச் சட்டம் ஊடகங்களை அடக்கவல்ல

## இப்படிச் சொல்கிறார் ஐதேக பொதுச் செயலர்

நிகழ்நிலைகாப்புசட்ட மூலம் சமூக வலைத்தளங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டமே தவிர ஊடகங்களை அடக்குவதற்கு கொண்டுவரப்படுவதல்லவென ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தைக் கொண்டுவந்து ரணில் விக்ரமசிங்க மக்களின் மனித உரிமையை மீறி ☞ 8

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில்

# எவ்.பி.ஐ. உள்ளிட்ட அமைப்புகள் தந்த புலனாய்வு அறிக்கைகளை வெளியிடுக

## ஆயர்கள் பேரவை வலியுறுத்து

அமெரிக்காவின் எவ்.பி.ஐ. உட்பட உலக நாடுகளின் புலனாய்வு அமைப்புகள் வழங்கிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த அறிக்கைகளை ஜனாதிபதி பகிர்ந்துகொள்ள வேண்டுமென கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை தெரிவித்துள்ளதாவது,

நீங்கள் சமீபத்தில் ஜேர்மனியின் ஊடகத்திற்கு வழங்கிய பேட்டி குறித்து எங்கள் கவனம் திரும்பியுள்ளது. உயிர்த்த ஞாயிறு விடயத்தில் நீங்கள் கத்தோலிக்க ஆயர்பேரவையுடனேயே விடயங்களைக்கையாள்கின்றீர்கள் கர்தினாலுடன் இல்லை என நீங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தியுள்ளீர்கள்.

கொழும்பு பேராயர் என்ற வகையில் கர்தினால் ☞ 2

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வர்த்தகர் தம்மிக்கவுக்கும் விருப்பம்

## அவரே நேரில் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் தாம் வேட்பாளராக போட்டியிட தயாரென நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல வர்த்தகருமான தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புகின்றேன். எவ்வாறாயினும், மொத்த வாக்குகளில் குறைந்தது ☞ 2

# ஆளும் தரப்பின் உள் முரண்பாட்டால் பொலிஸ் மா அதிபர் நியமனம் இழுபறி

## பீரிஸ் எம்.பி. குற்றச்சாட்டு

ஆளும் தரப்பின் உள்ளக முரண்பாடுகள் காரணமாக பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளது. தற்போதைய பொலிஸ் மா அதிபரின் சேவை நீடிப்புக்காலம் நேற்றுடன் நிறைவுபெற்றபோதும் புதிய பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படவில்லை என சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவலவில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் சட்டம் ☞ 8

## நீதிபதி விடயத்தில் விசாரணையை வலியுறுத்தி

# உயர் நீதிமன்றம் முன்பாக சட்டத்தரணிகள் போராட்டம்

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதி வழங்குமாறும் நீதிமன்ற நீதிபதிகள் மீது செல்வாக்குசெலுத்துவதனை நிறுத்துமாறு கோரியும் கொழும்பு - புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய சட்டத்தரணிகள், ''நீதிபதி மீது கைவைக் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இழுபறிப்பட்டுக் கிடக்கும் மற்றொரு நியமனம் பற்றியதே இன்றைய என் தகவல்.

மன்னார் மாவட்டத்திற்குச் செயலாளராக இருந்தவர் ஓகஸ்ட் மாதமே ஓய்வு பெற்றுச் சென்றுவி;டார். ஆனால் அந்தப் பதவிக்குப் புதியவர் ஒருவர் நியமிககப்படவில்லை. பிரதி மாவட்டச் செயலருடனேயே அரச நிர்வாகம் இயங்கி வருகின்றது.

மாவட்டச்செயலரைநியமிப்பதில் அரசநியமங்களையும்விதிகளையும் மட்டும் பார்ப்பதை விட்டுவிட்டு மத அரசியலுக்கு இடமளிப்பதாலேயே இந்த நிலமை ஏற்பட்டுள்ளது. மக்கள் தமக்கான முழுமையான சேவைகளைப்பெறமுடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

பதவி மூப்புநிலையில் மன்னார் மாவட்டச் செயலராவதற்கு மூன்று பேருக்குத் தகுதி இருக்கின்றது. ஆனால் அவர்கள் மூவரும் முஸ்லிம்கள். மாவட்டச் செயலர் பதவியைப்பெறுவதற்குஅவர்களும் அரசியல் செல்வாக்குகளைப் பயன்படுத்திமுயன்றுவருகின்றனர். ஆனால், அந்த முயற்சிகள் இன்னும் வெற்றிபெறவில்லை. காரணம், மன்னார் ஆயர் இல்லம்.

கிறிஸ்தவர்ஒருவரேமன்னாரின் மாவட்டச்செயலராக வரவேண்டும் என்று நிபந்தனை விதிக்கின்றது ஆயர் இல்லம். அரச ஸ்தாபன விதிக்கோவைகளுக்கு எல்லாம் முரணான, முற்றிலும் தவறான இந்த நிபந்தனையை மீறி நடப்பதற்கு அரசியல் நோக்கம் கருதி ஆட்சியாளர்களுக்குத் துணிபு இல்லாத காரணத்தால் மாவட்டச் செயலர்நியமனம்தாமதமாகின்றது.

முஸ்லிம்களில்ஒருவர்மாவட்டச் செயலர் நியமனம் பெறுவதைத் தடுப்பதற்காக வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் கிறிஸ்தவர்களான மூன்று பேரின் பெயர்களை ஆயர் இல்லம் பொது நிர்வாக அமைச்சுக்குப் பரிந்துரைத்துள்ளது. இதில்முதலாமவர்மீதுஊழல்மோசடி தொடர்பாக 9 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு குற்றப்பத்திரமும் (சாஜ்ஷீட்) வழ்கப்பட்டுள்ளது. அவர் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை முடிவடையும்வரைஅவருக்குப்பதவி உயர்வுகள் வழங்கப்படமுடியாது என்று நிராகரிக்கப்பட்டுவிட்டது.

ஆயர் இல்லம் பரிந்துரைத்த இரண்டாவது நபரின் நிலையோ இன்னும்மோசம். அவர்மீதுமோசடி தொடர்பாக 20 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளனவாம். எனவே அவரும் பொருத்தமற்றவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாமவர்பதவித்தரவரிசையில் மாவட்டச் செயலர் ஆவதற்கான இலங்கை நிர்வாக சேவையின் சிறப்புத் தரத்தை இன்னும் அடையாதவர். முதல்நிலைத்தரத்தில் இருப்பவர். அதனால் அவருக்கும் நியமனம் வழங்க முடியாது என்று நிராகரிக்கப்பட்டுவிட்டது.

இப்படி ஆயர் இல்லம் வழங்கிய பெயர்கள் எல்லாம் நிராகரிக்கப்பட்டநிலையில்இப்போது கிறிஸ்தவர்களைத்தேடும்வேட்டை தீவிரமாக நடந்து வருகின்றது. இதற்கிடையில் சிங்களவர்கள் சிலரும் இந்தப் பதவியில் கண் வைத்தள்ளனர். கடைசியில் அவர்களில் யாராவதுதான் இந்தப் பதவியில்அமரும்நிலைவரும்போல் உள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையாகும்.

தேர்தல்கள்பிற்போடப்படுவதன் மூலம் இந்நாட்டை மீண்டும் இருண்ட காலத்துக்கு கொண்டு செல்லவா தற்போதைய ஆட்சி தயாராகி வருகின்றது என நாம் கேள்வி எழுப்புகின்றோம்.

அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம், நடத்தப்படவேண்டிய தேர்தலை ஒத்திவைப்பதும், நடத்தாமல் இருப்பதும் ஒரு நாட்டின் ஜனநாயகத்தின் மீதான கடுமையான தாக்குதல் என்பது இரகசியமான விடயமல்ல.

''ஒத்திவைக்கப்பட தேர்தல் என்று ஒன்று இல்லை" என மக்கள் இறைமையுள்ளநாடாளுமன்றத்தில் வைத்து கேலியாகவும், ஏளனமாகவும்,அவமதிக்கும் விதமாகவும் பேசிய ஜனாதிபதியைக் கொண்ட இந்த ஆட்சியிடமிருந்து தேர்தலை எதிர்பார்ப்பது வெறும் கனவுதான் என்றாலும், இந்த ஒரு தலைபட்ச செயல்முறைக்கு எதிராக சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஜனநாயகத்தையும் மக்கள் இறையாண்மையையும் நசுக்க எடுக்கும் சர்வாதிகார மற்றும் ஜனநாயக விரோத ஆட்சியின் அனைத்து நடவடிக்கைகளும் மக்கள் சக்தியால் தோற்கடிக்கப்படும் என்றுள்ளது.

## இஸ்ரேலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள இஸ்ரேலியர்கள் குறித்து தேடிப் பார்க்குமாறு பொலிஸ் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளேன்.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் எனும் இரு நாட்டுக் கொள்கையை இலங்கை எப்போதும் ஆதரித்து வருகிறது. அதற்கு நாம் நிச்சயம் ஆதரவு வழங்குவோம். சில சமயங்களில் இஸ்ரேலின் நடவடிக்கைகளை நாம் கண்டித்திருக்கிறோம்.

இருப்பினும், இவை அனைத்தும் இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலில்ஏராளமானபொதுமக்கள் கொல்லப்பட்டதைநியாயப்படுத்தாது. முன்னெப்போதும் இல்லாத இந்தத் தாக்குதலை இலங்கை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது.

மோதல்கள் மற்றும் வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். ஆபிரிக்க ஒன்றியம் கொண்டு வந்த பிரேரணைக்கு இலங்கைஇணக்கம்தெரிவிக்கிறது. இந்த நெருக்கடியினால் மற்றொரு பாதிப்பும் ஏற்படும். ஒரு பீப்பாய் பெற்றோலின் விலை 100 டொலர் வரை உயரும் என்று எதிர்பார்க்கலாம்.

அதன் பிறகு பெப்ரவரி இறுதியில் இருந்து மீண்டும் விலை குறையும். இந்த நெருக்கடியானது எரிபொருளுக்கு மேலும் பற்றாக் குறையை ஏற்படுத்தும். இதன் விளைவாக எரிபொருளின் விலை நீண்டகாலத்திற்கு உயர்ந்திருக்கும். இது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்திற்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றுள்ளது.

## துப்பாக்கியால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



காலமாகத் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் நேற்றைய தினம் பொலிசாரைக் கண்டவுடன் தப்பியோட முயன்றுள்ளார். இதன்போதே பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காலில் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சந்தேக நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வரும் சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதவான் எதிர்வரும் 16ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

51 சதவீதமான வாக்குகளைப் பெறுவதுஉறுதியானால்மாத்திரமே தேர்தலில் போட்டியிடுவேன்.

நான் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினராகவே உள்ளேன். எனவேஎம்முடையவேட்புமனுவை பெரும்பான்மைக் கட்சிகள் ஏற்றுக்கொண்டால் எனது ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்குக் கணிசமான அளவு வலுசேர்க்கும் - என்றார்.

அவர் 2022 ஜூனில் பொது ஜன பெரமுனவின் தேசியப் பட்டியலில் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்,நாடான்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷவின் இராஜினாமாவை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக நியமிக்கப்பட்ட அவர், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக பதவியேற்றார், ஆனால் இரண்டு வாரங்களுக்குப் பிறகு அந்தப் பதவியிலிருந்து விலகினார்.

அவர் மூலோபாய நிறுவன மேலாண்மை முகமையின் தலைவராகவும் மத்திய வங்கியின் நாணயக்கொள்கைஆலோசனைக் குழுவின் குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். பொருளாதார வளர்ச்சி வியூகம் மற்றும் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 4,000 அமெரிக்க டொலர்களில் இருந்து 12,000 ஆக அதிகரிப்பதற்கான செயல்திட்டத்தின் வடிவமைப்பாளராக உள்ள அவருக்கு தற்போது 55வயதாகும்.

## எவ்.பி.ஐ. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிநபர் இல்லை. இலங்கையின் கத்தோலிக்க ஆயர்கள்பேரவையின் மிக முக்கிய உறுப்பினர் என்பதை சுட்டிக்காட்டவேண்டும். இதன் காரணமாக கர்தினாலை தனித்து ஒருவராக நீங்கள் சுட்டிக்காட்டுவது கத்தோலிக்கஆயர்கள்பேரவையின் கூட்டுரிமையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாக அமையும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையின் முழுமையை கத்தோலிக்க ஆயர்கள் பேரவைக்கு வழங்கியமைக்காக நாங்கள் உங்களிற்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

இதன் தொடர்ச்சியாக பேட்டியின்போது நீங்கள் எவ்பிஐ,- பிரிட்டிஷ்பொலிஸார், ஆஸ்திரேலிய, இந்திய, சீன, பாக்கிஸ்தான் புலனாய்வு பிரிவினர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளனர் என்று தெரிவித்துள்ளீர்கள்.

இந்த விடயம் பொதுமக்களின் கவனத்தையும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் இந்த அறிக்கைகளின் பிரதிகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றுள்ளது.

## உயர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காதே'', ''நீதித்துறையில் தலையிடாதே'', ''உண்மையை வெளிப்படுத்த நீதி விசாரணை தேவை'' என்று கோசங்களை எழுப்பியதோடுநீதிமன்றவளாகத்தில் ஊர்வலமும் சென்றனர்.

இதில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை சேர்ந்த சட்டத்தரணிகள் கலந்து கொண்டிருந்ததோடுதமிழ், முஸ்லிம் மூத்த சட்டத்தரணிகள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

அங்கு, சட்டத்தரணி சுமந்திரன் கருத்துவெளியிடுகையில், நாங்கள் நீதிச்சேவை ஆணைக் குழுவின் முன்பாகவும் உயர் நீதிமன்றின் முன்பாகவும் ஒன்றுகூடி எமது கோரிக்கையை வெளிப்படுத்தியுள்ளோம். நீதித்துறை மீதுஅழுத்தங்கள்காணப்பட்டுள்ளது. அது தற்போது உச்சத்தினை அடைந்துள்ளது. ஆகவேநீதிபதியின் விடயத்தில் உண்மைகள் கண்டறியப்படவேண்டும். இல்லாது விட்டால் சட்டத்தின் ஆட்சி என்றால்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

# ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இன்னமும் முடிவு ஏதுமில்லை

### பொது ஜன பெரமுன அறிவிப்பு

ஜனாதிபதி வேட்பாளர்குறித்துகட்சிஇன்னமும் முடிவு எதுவும் எடுக்கவில்லை என்று பொதுஜன பெரமுவின் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் உள்ள பொது ஜன பெரமுவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்தகொண்டபோது தம்மிக்கப்பெரேராவின் ஜனாதிபதி வேட்பாளர் பற்றியஅறிவிப்புதொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தம்மிக்கப்பெரேரா பொது ஜன பெரமுனவின்உறுப்பினராகவே தற்போதும் உள்ளார். அந்த வகையில் கட்சியாக அவரது விரும்பம் குறித்த எமது மகிழ்ச்சியை நாம் வெளியிடுகின்றோம். அதேநேரம், அவர் கட்சியின் கருத்திற்குப் புறம்பாகச் செயற்படப்போகிறார் என்றுஅவர்ஒருபோதும் அறிவிக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புகிறார் என்று தெரிவித்துள்ளார். நாட்டிலிலுள்ள பல அரசியல்வாதிகளின் விருப்பமும் அதுவாகவே உள்ளது.

அவர் விருப்பத்தினை வெளிப்படுத்தியிருந்தாலும்கட்சியின் செயன்முறை என்பது வேறொருவிடயமாகும். எமது கட்சியானது ஜனநாயக உரிமைகளை மதிக்கின்ற கட்சியாகும். அவருடைய விருப்பத்தை வெளியிடுவது ஜனநாயக உரிமையாகும்.

எமது கட்சியைப் பொறுத்தவரையில் தம்மிக்க பெரேராவின் பல்வேறு உதவிகளை நாம் மறக்கவில்லை. அவருடைய விருப்பு தொடர்பில் உத்தியோகபூர்வமான அறிவிப்புக்கள் கிடைக்கவில்லை. மேலும் ஜனாதிபதி தேர்தலுக்கு மேலும்காலம்உள்ளது. ஆகவே ஒருவருடத்திற்கு முன்னதாகவே தீர்மானம் எடுப்பது ஆகக்கூடுதலான முற்கூட்டிய செயலாகும். நாம் கட்சியாக இன்னமும் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தீர்மானம் எடுக்கவில்லை - என்றார்.

# நாகப்பட்டினம் கப்பல் சேவை வியாழக்கிழமையே தொடங்கும்

(ந.லோகதயாளன்.)

காங்கேசன்துறையில் இருந்து இந்தியாவின்நாகைபட்டினத்திற்கான பயணிகள் கப்பல் சேவை ஒக்டோபர் 12வியாழக்கிழமையேஆரம்பமாகும் எனதற்போதுஅறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் மேலதிக சில வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த காலதாமதம் ஏற்படுவதாகபயணிகள்சேவையின்சிட்டை முகவர் நிலையம் தெரிவித்தனர்.

இதேநேரம் நாளை மறுதினம் பயணிப்பதற்காகநாகைபட்டினத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிப்பதற்கு 30 பேரும் காங்கேசன்துறையில் இருந்து பயணிக்க 10 பேரும் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

# கடன் மறுசீரமைப்புத் திட்டத்தில் இலங்கைக்கு பெரும் பின்னடைவு

### இன்னும் பல மாதங்கள் செல்லும் என்கிறது நாணய நிதியம்

கடன்மறுசீரமைப்புதிட்டங்களை செயள்படுத்துவதில் இலங்கை இன்னும் பின்தங்கியுள்ளது. மறுசீரமைப்பு செயல்முறையை முடிப்பதற்கு பல மாதங்களாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டியா ஜோர்ஜிவா தெரிவித்தார்.

மொராக்கோவில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த கூட்டங்களுக்கு முன்னதாக கருத்து வெளியிடும்போஹிது அவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலுமதெரிவித்ததாவது:

ஜி-20 தலைவர் மற்றும் உலக வங்கியுடன் இணைந்து, பொது மற்றும் தனியார் கடன் வழங்குபவர்கள் மற்றும் கடனாளி நாடுகளை ஒன்றிணைக்கும் உலகளாவிய இறையாண்மை கடன் வட்ட மேசையை நாங்கள் அமைத்துள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் பிணை எடுப்பதற்கான திட்டத்திற்கு அனுமதி பெறுவதற்குத் தேவையான கடனாளர் உத்தரவாதங்களைப் பெறுவதற்கு சர்வதேசநாணயநிதியத்துடனான பணியாளர் நிலை ஒப்பந்தத்தில் இருந்து மாறுவதற்கு இலங்கை ஆட்சியாளர்களுக்குப்பலமாதங்கள் எடுத்தது. இதனால் இலங்கையில் அவ்விடயம் குறித்து விரைவான முன்னேற்றம் அவசியமாக உள்ளதோடு சரியான திசையிலும் நகர வேண்டும்.

பாதிக்கப்படக்கூடிய வளர்ந்து வரும்மற்றும்வளரும்நாடுகளுக்கு ஆதரவளிக்க இன்னும் அதிகமாக ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும அதனால்தான் உலகளாவிய நிதி பாதுகாப்பு வலையை நாம் அவசரமாக வலுப்படுத்த வேண்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பொதுவான கட்டமைப்பு என்பது சர்வதேச நாணய நிதியதியத்தின் ஆதரவு சீர்திருத்தத் திட்டத்தை செயற்படுத்துவதோடு, திவாலான மற்றும் நீடித்த பணப்புழக்கச் சிக்கல்களைச்சமாளிக்கும்நோக்கம் கொண்டது.

ஜி-20 உத்தியோகபூர்வ கடனாளிகள் - பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா போன்ற பாரம்பரிய 'பாரிஸ் கிளப்' கடன் வழங்குநர்கள் மற்றும் சீனா மற்றும் இந்தியா போன்ற புதிய கடன் வழங்குநர்கள், கடந்த தசாப்தத்தில் பாரிஸ் கிளப்பை விடவும் முந்தியுள்ளனர். அத்தியாவசியசெலவுத்தேவைகளை செலுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் கடனாளியின் திறன் அதிகரிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும்.

பொதுவான கட்டமைப்பின்படி, கூட்டு நடவடிக்கையானது சவால்களை சமாளிக்கவும், நியாயமான சுமைப் பகிர்வை உறுதிப்படுத்தவும் தனியார் கடன் வழங்குநர்கள் ஒப்பிடக்கூடிய விதிமுறைகளில் பங்கேற்கவும் வேண்டும்.

1948 இல் பிரித்தானியாவிடமிருந்துசுதந்திரம்பெற்றபின்னர், நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சியடைந்து, கடந்த ஆண்டு முதல் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தாததைத் தூண்டியபின்னர், இலங்கை அதன் மோசமான நிதி நெருக்கடியுடன் போராடி வருகிறது.

பொருளாதார சரிவு பரவலான எதிர்ப்புகளைத் தூண்டியது மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ கடந்த ஜூலை மாதம் நாட்டைவிட்டுவெளியேறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அதன் பெரும் கடன் சுமையை நிலையான பாதையில் வைப்பதாக உறுதியளித்து, இலங்கை மார்ச் மாதம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 2.9 பில்லியன் டொலர்கள் நீடித்த கடன்வசிதியை வழங்கியுள்ளது.

இலங்கை அரசாங்கமும் அதன் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது, இது தோராயமாக 51பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். பாரிஸ் கிளப் மற்றும் இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகள் உட்பட வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடன் அரசாங்கம்

காலைக்கதிர் Kalaikkathir

# தலைமன்னார் – தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தியை ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சிறுவன் நீந்திக் கடந்து சாதனை






இயலாமைக்கும் சாதனைக்கும் உள்ள தூரத்தை நீந்தி கடந்து சாதனை படைக்க வேண்டும் என ஆட்டிசம் மற்றும் பேசும் திறன் குறைபாடு உள்ள சிறுவன் இலங்கை தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

சென்னையைச்சேர்ந்த பரத் மோகன் நிர்மலா தேவி தம்பதியின் மகன் ஹரேஷ் பரத் மோகன். இவர் ஆட்டிசம் மற்றும் பேசும் திறன் குறைபாடு உள்ள மாற்றுத்திறனாளி.அவரது பெற்றோர் அவரை நீச்சல் துறையில் சாதிக்க வேண்டும் என்ற நோக்கில் சிறு வயது முதல் நீச்சல் பயிற்சியை முறையாகக் கற்றுக் கொடுக்கத் தொடங்கினர்.

இயலாமைக்கும் சாதனைக்கும் உள்ள தூரத்தை நீந்தி கடந்து சாதனை படைக்க வேண்டும் என இலங்கையிலுள்ள தலைமன்னாரில் இருந்து இந்தியாவில் உள்ள தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை நீந்தி சாதனை புரிவதற்காக ஹரேஷ் பரத் மோகன் ராமேஸ்வரம் அடுத்துள்ள சங்குமால் துறைமுகத்தில் இருந்து வெள்ளிக்கிழமை காலை தனது பயிற்சியாளர்கள் மற்றும் மீனவர்கள் என 20 பேர் கொண்ட குழுவினருடன் தலைமன்னாருக்கு புறப்பட்டு சென்றார்.

தலைமன்னாரில் வெள்ளிக்கிழமை இரவு 11.37 மணியளவில் கடலில் குதித்து நீந்த தொடங்கி சனிக்கிழமை பிற்பகல் 11.29 மணி அளவில் 11 மணி நேரம் 52 நிமிடம் ஹரேஷ் பரத் மோகன் நீந்தி தனுஷ்கோடி அரிச்சல் முனையை வந்தடைந்தார்.

அரிச்சல்முனை வந்தடைந்த ஹரேஷ் பரத் மோகளை அவரது தாய் கண்ணீர் மல்ல முத்தமிட்டு வரவேற்றார். அதனை தொடர்ந்து சுங்கதுறை கண்காணிப்பாளர் சம்பத், மரைன் இன்ஸ்பெக்டர் கனகராஜ் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

(05)

## ஆயர் பேரவையுடன் ஜனாதிபதி தாக்குதல் பற்றி பேசவேயில்லை

### அதன் தலைவர் ஹெரால்ட் அண்டனி ஆண்டகை தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கத்தோலிக்க ஆயர் பேரவையைச் சந்திக்கவில்லை. என்னுடன் தனிப்பட்ட ரீதியில் இடம்பெற்ற சந்திப்பின் போது விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கிடைக்கப்பெற்றது என கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் ஹெரால்ட் அண்டனி ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜேர்மன் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் சகோதர மொழி பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே ஹெரால்ட் அண்டனி ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக சுயாதீனமானதும், வெளிப்படைத் தன்மையானதுமான பக்கச்சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் அவ்வாறான விசாரணைகள், சர்வதேச சுயாதீன விசாரணைக்குழுக்களின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற வேண்டும்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை சகல தேசிய பிரச்சினைகளைப் போன்றே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஒரே நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் நியமிக்கப்பட்ட இரு ஆணைக்குழுக்கள் மற்றும் நாடாளுமன்ற விசேட குழு ஆகிய-வற்றால் முன்மொழியப்பட்டுள்ள பரிந்துரைகள் இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.


இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் சர்வதேசத்தின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பது பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட கத்தோலிக்க ஆயர் பேரவையின் நிலைப்பாடாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கத்தோலிக்க ஆயர் பேரவையின் முழுமையான இனக்கப்பாட்டுடன் ஏகமனதாகவே அறிவிப்புக்கள் வெளியிடப்படும். அத்தோடு இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கத்தோலிக்க ஆயர் பேரவையை சந்திக்கவில்லை.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியில் என்னைச் சந்தித்தார். அந்தச் சந்திப்பின் போது அப்போது நாட்டில் காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பிலேயே நாம் பிரதானமாகக் கலந்துரையாடினோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கையை மதிப்பீடு செய்வதற்காக எம்மிடம் வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அந்த முழுமையான அறிக்கையிலுள்ள 6 தொகுதிகள் எமக்கு வழங்கப்பட்டன. அந்த அறிக்கை எமது சட்டத்தரணிகளால் தற்போது மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

(05)

## நடிகர் ஜாக்சன் ஆண்டனியின் இறுதி கிரியைகள் வியாழன்



நேற்று அதிகாலை காலமான பழம்பெரும் நடிகர் ஜாக்சன் ஆண்டனியின் இறுதிக் கிரியை எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஜாக்சன் ஆண்டனியின் பூதவுடல் இன்று பொரளையில் உள்ள தனியார் மலர்சாலையில் வைக்கப்பட்டு பின்னர் ராகமவில் உள்ள அவரது தனிப்பட்ட இல்லத்தில் வைக்கப்படும்.

வியாழன் பிற்பகல் 3 மணியளவில் ராகமவில் உள்ள புனித பீட்டர் ரூ பால் தேவாலயத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெறும் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

பழம்பெரும் நடிகர் ஜாக்சன் ஆண்டனி தனது 65ஆவது வயதில் காலமானார்.

(05)

## அனுமதியற்ற மோ. சைக்கிளுடன் 8 பேர் திருகோணமலையில் கைது

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாம்பல் தீவு பகுதியில் வீதியில் அனுமதிக்க முடியாத எட்டு மோட்டார் சைக்கிளுடன் எட்டு இளைஞர்கள் கைது செய்-யப்பட்டுள்ளனர் என நிலாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

இந்த மோட்டார் சைக்கிலானது போட்டிக்காக கொண்டு வந்ததாகவும் இதில் ஆறு மோட்டார் சைக்கிளுக்கு அனுமதிப் பத்திரம் இல்லை என்பதும் தடைசெய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் எனவும் தெரியவருகிறது. குறித்த கைது செய்யப்பட்ட இளைஞர்கள் சுமார் 20 தொடக்கம் 25 வயதுடைய மீகமுவ மற்றும் அதனை அண்டிய பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த இளைஞர்களை உரிய மோட்டார் சைக்கிளுடன் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை நிலாவெளி பொலிஸார் முன்னெடுத் துள்ளனர்.

(05)

## பயணிகளை ஏற்றுவதில் போட்டி: இரு பஸ்கள் மோதி 6 பேர் காயம்



ஹொரணை, பல்லாபிட்டிய பிரதேசத்தில்இரண்டு தனியார் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 6 பேர் காயமடைந்துவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளனர் எனக் ஹொரண தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து நடந்த அதே நேரத்தில் விபத்தை ஏற்படுத்திய பஸ் சாரதி ஒருவரை பயணிகளும் பிரதேச மக்களும் தாக்கியதையடுத்து பொலிஸார் தலையிட்டு சாரதியை பெரும் பிரயத்தனத்தின் பின்னர் மீட்டு கைது செய்துள்ளனர்.

இந்த விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட 6 பேர் காயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்துக்கு பஸ்ஸில் பயணிகளை ஏற்றுவதில் ஏற்பட்ட போட்டித்தன்மையே காரணம் எனக் கூறப்படுகிறது.

(05)

## வயதான இரு பெண்களை கொன்று நகை கொள்ளை

### 25 வயது இளைஞன் கைது

மாத்தறை பிரதேசத்தின் ப்ரீத்தி பிரவுன்சில் பகுதியில் உள்ள வீடொன்றில் பணிபுரிந்து வந்த 67 மற்றும் 70 வயதான பெண்களை சிலர் கொலை செய்து விட்டு வீட்டில் இருந்த பொருள்களை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக மாத்தறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் உரிமையாளர் வீட்டில் இருந்து வெளியேறி மீண்டும் வருகை தந்த போது பணிப்பெண்கள் இருவரையும் காணாத நிலையில் அயலவர்களுடன் இணைந்து குறித்த உரிமையாளர் தேடியுள்ளார். இதன்போது, அவர்கள் கொலை செய்யப்பட்டு கழிவறைக்குள் காணப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து, சம்பவம் குறித்து பொலிஸில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

குறித்த சமயத்தில் வீட்டின் அலுமாரி உடைக்கப்பட்டு தங்கம் அல்லாத 12 வளையல்கள், 2 மாலைகள், தங்க கரண்டி ஒன்று மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் என்பன களவாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பாக விசாரணையை ஆரம்பித்த மாத்தறை பொலி-ஸார் 25 வயதான சந்தேக நபர் ஒருவரை கைது செய்-துள்ளதோடு அவரிடம் இருந்து திருடப்பட்ட பொருள்களையும் மீட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலி ஸாரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் தேர்தல் ஒத்திவைப்பா?

ஏற்கனவே உள்ளூராட்சித் தேர்தல்கள் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் மக்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ள நிலையில் அடுத்த வருடம் நடத்தப்படும், நடத்தப்படவேண்டும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அரசுத் தலைவர் தேர்தலும் நடக்காமல் போகக்கூடும் என்கிற அபாய எச்சரிக்கையை எழுப்பியுள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

இந்த நிலமை வரக்கூடும் என்று இதற்கு முன்னர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பல வாரங்களுக்கு முன்னர் எதிர்வுகூறியிருந்தார். ஆனால், இப்போது சஜித் அதனை உறுதிப்படுத்தும் வகையில் சிறப்பு அறிக்கை ஒன்றின் மூலம் தனது கவலையை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

"ஆளும் தரப்பு அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேர்தல்களையும்ஒத்திவைக்கத்தேவையானசூட்டுச் சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் இரகசியமாக செய்து வருகிறது.

தேர்தல் முறையை மாற்றியமைத்தல் என்ற 'ஐசிங் கேக்' துண்டை நீட்டுவதன் மூலம் ஆளும் தரப்பு இதற்குத் தயாராகிறது. இது விசம் கலந்த கேக் துண்டாகும். அத்துண்டுக்காக இந்நாட்டு மக்கள் ஏமாற மாட்டார்கள்.

மக்கள் ஆணை இல்லாத ஆட்சியாளர்களுக்கு மக்களின் ஆசிர்வாதம் எந்த வகையிலும் கிடைக்கப்பெறாது. சந்தர்ப்பவாதமாக ஆட்சியைக் கைப்பற்றியவர்கள், மக்களின் ஆணையையோ அல்லது விருப்பத்தையோ கருத்தில் கொள்ளாது ஆட்சியைத் தொடரச் சதி செய்கிறார்கள்.

பல்வேறுஅரசியல்தந்திரங்களையும்பயன்படுத்திக் கொண்டுதனதுஆட்சியைமுன்னெடுத்துச்செல்லும் அரசுத் தலைவரின் இந்த முயற்சியின் முடிவு ஆபத்தானது என்பது முழு உலகமும் உணரக்கூடிய உண்மையாகும்.

தேர்தல்களைப் பிற்போடுவதன் மூலம் இந்நாட்டை மீண்டும் இருண்ட காலத்துக்கு கொண்டு செல்லவா தற்போதைய ஆட்சி தயாராகி வருகின்றது என நாம் கேள்வி எழுப்புகின்றோம்.

அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம், நடத்தப்படவேண்டிய தேர்தலை ஒத்திவைப்பதும், நடத்தாமல் இருப்பதும் ஒரு நாட்டின் ஜனநாயகத்தின் மீதானகடுமையானதாக்குதல்என்பதுஇரகசியமான விடயமல்ல'' என்று எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்திருக்கின்றார்.

அவர் எழுப்பியிருக்கும் இந்தக் குற்றச்சாட்டை அடியோடு நிராகரித்துவிடவும் முடியாது. ஏனெனில் இத்தகைய ஒரு தேர்தல் சீர்திருத்தச் சட்டமூலத்தின் மூலமே ரணில் விக்கிரமசிங்க மாகாண சபைத் தேர்தலை கடந்த 10 வருடங்களாக நடத்தாமல் இருந்துவருகின்றார். அதேபோன்றதொரு நிலையை அவர் அடுத்த வருடத்தில் ஏற்படுத்தக்கூடும் என்பதை நிராகரித்துவிட முடியாது. ஆனால், அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

மக்களின் உரிமைகளை நசுக்கி ஆட்சியைத் தக்கவைக்க ரணில் முயல்வாராக இருந்தால் அது சர்வாதிகாரம். ஒட்டுமொத்தமக்களும்அதற்கெதிராகக் கிளர்ந்தெழ வேண்டியது அவசியம். ஒருபோதும் அதனை அனுமதிக்கக்கூடாது.

# கற்பகதரு என்னும் அற்புதம்

# பயனளிக்கும் பனை மட்டை

**அங்கம் -17**



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பனந்தும்பினை ஏற்றுமதி செய்யும் நாடுகள் என்று நோக்கும் பொழுது - ஒரு காலத் தில் இலங்கை முன்னிடம் வகித்ததாயும், குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டமே இடம்பெற்றதாயும் அறிய முடிகிறது. பனந்து-ம்பினை உலகினுக்கு அறிமுகப் படுத்தியவர்கள் என்னும் பெருமையினை யாழ்ப்பாணத்தவரும், யாழ்பாண மாவட்டமுமே பெற்றிருந்தது என்று அறியும் பொழுது பெருமைப்பட வைக்கிறதல்லவா! வெளிநாடுகளுக்கான பனந்தும்பானது -பருத்தித்துறை, வங்காலை, வல்வெட்டித்துறை, கொழும்புத் துறைத்துறை, துறைமுகங்களூடாகவே அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது என்னும் செய்தி இரட்டிப்பு மகிழ்ச்சியினைக் கொடுக்கக் கூடியதாய் இருக்கிறதல்லவா! பனந்தும்பு உற்பத்தியில் தலையாய இட த்தில் இருந்த இலங்கை - அந்த உற்பத்தியில் தொடர்ந்து முன்னிலை வகிக்க முடியாமல் ஆகியது என்பது மகிழ்ச்சிக்கு உரிய விடயமல்ல. இலங்கையின்பின்னடைவு-இந்தியாவை உற்சாகப் படுத்தி விட்டது. இன்று இலங்கையைவிட , இந்தியாதான் பனந்தும்பு உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் முன்னிற்கிறது என்பது நோக்கத்தக்கதாகும். ஆனாலும் இலங்கையும்- தளர்ந்துவிடாது பனந் தும்பினை உற்பத்தி செய்தபடியேதான் இருக் கிறது. ஏற்றுமதியிலும் கவனத்தைச் செலுத்தியும் வருகிறது. பனந்தும்புத் தொழிற்சாலைகளை நிறுவியும் பராமரித்தும் வரும்பணியில் -பனைஅபிவிருத்திச்சபையானது தன்னால் இயன்றவரை முயற்சிப் பாதையில் பயணித்து வருகிறது என்பதையும்கட்டாயம்குறிப்பிட்டே ஆகவேண்டும். பனை அபிவிருத்திச்சபையினைஅலங்கரிக்கும் அதிகாரிகளும், அதன் அலுவலர்களும் - பனைபற்றிய நல்ல சிந்தனையில் இருக்கிறார்கள் என்பது நோக்கத்தக்கதேயாகும். பனந்தும்பானது முல்லைத்தீவு மாவட்டத்தில் உற்பத்தி செய்-யப்பட்டு 1987 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்டது என்று அறிய முடிகிறது. அதுமட்டுமல்லாமல், பருத்தித்துறை, சாவகச்சேரி, ஆகிய இடங்களில் ஏற்றுமதிக்கான அமைப்பும் உருவாக்கப்பட்டு பனந்தும்பானது ஏற்றுமதி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் நாட்டில் ஏற்பட்ட போரினால் அந்த நிலை தொடரமுடியாமல் போய்விட்டது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

என்றாலும் பனந்தும்பினை விட்டுவிட இலங்கை விரும்ப



வில்லை. ஏனெனில் பனந்தும்புக்கானசந்தைவாய்ப்புநிறையவே இருப்பதாகும். பனை அபிவிருத்திச்சபையின் கீழ் - யாழ்ப்பாண மாவட் டத்தில்- சரசாலை, மன்னார் மாவட்டத்தில் - செல்வாரி, ஓலைத்தொடுவாய் , புத்தளம் மாவட்டத்தில்- கற்பிட்டி , ஆகிய இடங்களில் , பனந்தும்பு உற்பத்தி நிலையங்களை இயங்கச் செய்து , பனந்தும்பு உற்ப த்தியில் கவனம் செலுத்தி வருகிறது என்பது கருத்திருத்த வேண்டிய விடயம் எனலாம். இலங்கையில் உற்பத்தியாகும் பனந்தும்பானது, தரத்தில் சிறந்ததாய் இருக்கிறது. அதுமட்டுமல்ல இலங்கைப் பனந் தும்பினுக்கு நல்ல வெளிநாட்டுச்சந்தைவாய்ப்பும்சிறப்பாய் இருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண் டிய விடயம் எனலாம்.

இந்தியா பனந்தும்பு உற்பத்தியிலும் , ஏற்றுமதியிலும் தன்னை முன்நிலைப்படுத்தியபடியே இருக் கிறது. ஏறக்குறைய முப்பதுக்கு மேற்பட்ட வெளிநாடுகள் இந்திய பனந்தும்பினைவிரும்பிவாங்குகிறன என்று அறியமுடிகிறது. அந்த வகையில் , ஜப்பான். அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஜேர்மனி, பெல்ஜி யம் போலந்து , செக்கோசிலவாக்கியா, ஒல்லாந்து, டென்மார்க, இத்தாலி, அவுஸ்திரேலியா நாடுகள் அமைகின்றன.

பனந்தும்பினை எடுத்தால் மட்டும் போதாது. எடுக்கப்படும் பனந்தும்பினை தரம் பிரிக்கும் நிலையும்காணப்படுகிறது. அப்படிப் பிரிக்கும் வேளை - பிரைம் ஸ்ரிப், நடுத்தரம், மென்மையானதுஎன்று மூன்று நிலையில் பிரிக்கப்படுகிறது என்று பார்த்தோம். முதலாம் தரமாய் கொள்ளப்படும் பனந் தும்பு விறை ப்புள்ள தும்பாக இருக்கும். இவ்வகையான பனந்தும்பில் எண்பது விகிதம் கறுப்புத்தும்புகலந்திருக்கும். இந்த நிலை எல்லாக் கோராக்களிலும் கலந்தே இருக்கும் என்பது நோக்கத்தது. முதல் வகையான தும்பினை எடுப்பதற்கு -விறைப்பு நிலையில் இருக்கின்ற கோரா நிலையிலேயே பிரித்துவிடல் முக்கியமானதாய் அமைகிறது. இப்படிப் பிரிப்பதற்கு இண்டு முறைகள் கையாளப்படுகிறது.

கோராத்தும்புகள் சந்தைக்கு வரும். அதில் கறுப்புப்பகுதி நிறைந்தே இருக்கும். கோராத் தும்பில் ஒரு குறிப் பிட்ட இடத்தில் இருக்கும்கறுப்பினைக்கையினால் பிய்த்து எடுப்பார்கள். எடுக்கப்பட்ட கறுப்புகள் சேகரிக்கப்படுகின்றன. இப்படிசெய்யும்முறை பிய்த்தெடுக்கும் கறுப்பு என்று பெயர் பெறுகிறது. கோராவில் உள்ள கறுப்புத்தும்பினை ஒவ்வொன்றாக பிரித்தெடுப்பது இரண்டாம் முறையாக அமைகிறது. இவ்வாறு செய்யும் முறையானது தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டதில் நடைபெறுகிறது.

கோராத் தும்பானது சந்தைகளிலிருந்து கொள்முதல் செய்-யப்பட்டு - தொழிற் கூடங்களுக்கு கொண்டு வரப்படுகிறது. இப்படிக் கொண்டுவரப்படும் கோராத் தும்புகள் பெரும்பாலும் ஈரமானதாகவே காணப் படுகிறது. இப்படி வருகின்ற ஈரக்கோராவின் ஒரு பகுதியானது - சுத்தம் செய்வதற்கு நேரடியாகவே கொடுக்கப்படுகிறது. சுத்திகரிப்பதற்கு உரிய தகுதியானவர்களின் எண்ணிக்கையினைக் கொண்டு பிரிக்கும் வேலை நடை பெறும். தகுதியானவர்களைப் பொறுத்து இந்தச் சுத்திகரிப்பு நடைபெறுவதால், இரண்டு நாட்களில் சுத்தம் செய்ய முடியா நிலையில் ஈரமான கோராக்களை வெ-ய்யிலில் உலர விடப் படுகிறது. ஈரமான கோராக்கள் உலரும் நிலையில் அவற்றின் நிறையும் குறை வடைகிறது. உலர்ந்து நிற்கும் தும்பு பத்திரமாய் சேகரித்து வைக்கப்படுகிறது. இவ்வாறு பதமாக வந்த தும்பு சுத்தீகரிப்புக்கு உள்ளாகிறது. நீரில் ஊறவைக்கப்பட்டு, பின் சீப்பில் இட்டுச் சீவப்படுகிறது. அதுவும் தலை மாற்றிச் சீவப்படுகிறது. இப்படிச் செய்கின்றபொழுது - கோரத் தும்பிலிருக்கும் தூசு , சோற்றுப் பகுதி அடிபடாதகங்குமட்டையின்தோல், துணுக்குகள், மயிலைபோன்ற ஊடு தும்புகள், யாவுமே சுத்தமாய் நீக்கப்படுகிறது. சுத்திகரிப்பு உட் பட்டு சீப்பிடப்பட்ட தும்பை இரண்டுஅல்லதுமூன்றுஅடிவிட்ட அளவில் , தரையில் வட்டமான பொதியாகக் கட்டி வைக்கிறார்கள்.

குளச்சல், வேடசத்தூர், இராமநாதபுரம் , சிவகங்கை, திரிச்செங்கோடு, மேச்சேரி, கரூர், சின்னத்தாராபுரம் , ஈரோடு, சென்னிமலை ஆகிய இடங்களில் பனந்தும்பு உற்பத்திநிலையங்கள் இருக்கின்றன. இந்த நிலையங்களில் - முதல்சீப்பு, வெள்ளை பிரித்தல், சுத்தம் செய்தல், அளவாகப் பிரித்தல், நறுக்குதல் என்று கோராத்தும்பு பதமாக்கி சேகரிக்கப்படுகிறது, இப்படிச் செய்யும் நிலையில் அவற்றில் இருக்கின்றகழிவுகள் அகற்றப்பட்டு தரமான தும்பு சேகரிக்கப்படுகிறது. ஐம்பத்து ஐந்து கிலோ கோராத் தும்பினைச் துப்பரவு செய்யும் நிலையில் - ஒவ்வொரு உற்பத்தி நிலையத்துக்கு தகுந்தாற்போல , கழிவின் தன்மை காணப்படும்.

(5ஆம் பக்கம் பார்க்க..)

# கற்பகதரு என்னும் அற்புதம்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

உற்பத்தியாகும் நிலையங்களைக் கருத்தில் கொண்டு எட்டு இடங்கள் ஆராயப்பட்டது. இவ்வாறு ஆராயப்பட்டதன் விளைவாக , கன்னியாகுமரி மாவட்டம் , கரூர் மாவட்டம் சின்னத் தாரா புரம் , ஆகிய இடங்களில் கிடைக்கும் தும்பில் - கழிவுகள் குறைவாகவே கிடைக்கிறது என்று அறிய ப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோராத் தும்பானது பல இடங்களில் கொள்முதல் செய்யப்படுகிறது.பின்னர் அத்தனையும் தொழிற் கூடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு , பல்வேறு நிலைகளில் பக்குவப்படுத்தப்பட்டு துறைமுகத்து எடுத்துச் செல்லப்படுகிறது. பனந்தும்பானது ஏற்றுமதி நிலையை அடைவதற்கு முன் எவ்வாறு பக்குவப் படுத்தப்படுகிறது என்பதை கருத்திருத்தல் அவசியமாகும்.தொழிற் கூடத்தில் எடையிடப்படுகிறது. பொதிகள் வைக்கும் பகுதியில் அதாவது கிட்டங்கியில் கவிழ்த்து வைக்கப்படுகிறது.பின்னர் ஒரே அளவில் பிரித்து -தேவையான அளவுக்கு நறுக்கப்படுகிறது.பின்னர் சாயமிடல், உலரவிடல்,உரிவி எடுத்துச் சீப்பிடல், முடியிடல், நுனி நறுக்குதல், என்று செய்தபின்னர் - முடிகளை இறுதியாக உலர விடப்படும். பின்னர் போலாக் கட்டுதல் இடம்பெறும். நிறைவாக குறியிட்டு துறைமுகத்துக்கு ஏற்றிச் செல்லப்படும். இதுபோன்று இன்னும் பல நிலைகளுக்கு தும்பு ஆளாக்கப்பட்ட பின்னே ஏற்றுமதிக்கு உரியதாகிறது என்பது முக்கியமாகும்.

கங்குமட்டையினை அதாவது பத்தலை அடித்துத்தானே தும்பு பெறப்படுகிறது.இப்படி எடுக்கப்படும் தும்பானது - ஏற்றுமதிக்கென தயாராகும் வரைக்கும் சுத்தம் செய்யப்பட்டுக் கொண்டே இருக்கும். இப்படிச் சுத்தம் செய்யப்படுகின்ற நிலையில் , கழிவு வந்து நிற்கும்.கழிவானது வந்து சேருவதற்கு பல காரணங்கள் கண்டறியப் பட்டிருக்கின்றன.பத்தலை அடிக்கும் வேளை - சரியான முறையில் அடிக் காமல் தும்புடன் சதைப்பகுதி ஒட்டி இருக்கும்படி விடப்படுதல், மட்டையில் காணப்படும் கடினமான பகதி அதாவது கருக்கு சரியாக அடிபடாமல் பத்தலிலேயே நின்று விடுவது, அதுமட்டுமல்ல பத்தலி ருந்து கிடைத்த தும்பைக் கருக்கு மட்டையில் இருக்கின்ற கூர்மையான பகுதியால் சிலர் சீவுகின்றனர். இதனால் கழிவுகள் வரும் நிலை ஏற்படுகிறது.மேலும் -பத்திலிருந்து அடித்த தும்பை சீப்பிடாமல் கட்டி வைப்பதும் கழிவுக்குக் காரணமாகிறது. கோரத்தும்பை வெய்யிலில் உலர்த்தினால் அதில் ஒட்டியி ருக்கும் சோற்றுப்பகுதி காய்ந்து கீழே உலர்ந்துவிடும்.உலர விடாமலேயே தும்பை அப்படியே ஈரத்துடன் கட்டி வைத்துவிடுவது.

அத்துடன் தும்பின் எடையினைக் கூட்டிக் காட்டி அதனை விற்பதற்காக - பத்த லின் உள்தோலினைப் பிரிக்காமலேயே அடித்து பத்தலாகவே கோராவில் சேர்த்து விடப்படுதல். இப்படி யான நிலைகளே தும்பில்,கழிவுகள் வருவதற்குக் காராணங்களாய் அமைகின்றன என்பது முக்கிய மாகும். கழிவாய் வந்து விட்டதே என்று கவலை கொள்ளவும் தேவையில்லை.கழிவாய் வருகின்ற தும்பினை எரிக்கப் பயன்படுத்தினார்கள்.அதுமட்டும் அல்லாமல் வாகனங்களை ஓட்டுகின்ற ஓட்டுநர்கள் இருக் கின்ற இருக்கைகளுக்கும் பயன்படுத்தினார்கள்.பனந்தும்பினைக் கொண்டு மெத்தைகள் தயாரிக்கப்பட்டு மாட்டு வண்டிப் பயணத்துக்கும் பயன்படுத்தினார்கள்.இப்படிப் பலவாறு பயன்படுத்தப்பட்டு வந்த கழிவுத் தும்பின் பயன்பாடு குறைவடைந்து வரும் நிலையே ஏற்பட்டது. கழிவுத் தும்பினை வீணாக்காமல் அதனைப் பயன்படுத்தவும் முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும். கழிவுத்தும்பினை- வெறும் கழிவு என்று கருதாமல் அதனையும் எப்படி! எவ் வாறு! பயன் படித்தலாம் என்று சிந்திப்பதே சிறப்பானதாகுமல்லவா ! அப்படிச் சிந்தித்ததன் பயனாய் கழிவுத் தும்பினைப் பயனாக்கி கயிறு திரிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.அந்த நிலையில் -குடிக்க யிறு, வால்கயிறு, வடக்கயிறு, ஆகிய கயிறுகள் வந்து அமைகின்றன. கழிவுத்தும்பினைக் கொண்டு கயிறு திரிக்கலாம் என்னும் பொழுது - அங்கு கவனமும் தேவைப் படு கிறது. கழிவுதானே என்று அத்தும்பை கடும் வெய்யிலிலும், மழையிலும் கிடக்கிட விடப்பட்டால் அதி லிருந்து பயன்பாட்டினைப் பெற்று விடமுடியாமலும் போய்விடலாம். ஆதாலால் அத்தும்பினைப் பாது க்காப்பாய் வைக்க வேண்டும். கழிவுத்தும்பின் மேல் குப்பையைப் போடக்கூடாது.அத்துடன் தும்பிலிரு ந்து வருகின்ற சோற்றையும் போட்டுவிடவும் கூடாது.வாரத்துக்கு ஒருமுறை கிடைக்கும் கழிவான தும் பினை - நன்றாக கழுவி எடுத்துச் சுமையாகக் கட்டி வைக்கவேண்டும்.இப்படிச் செய்கின்ற பொழுது தான் தும்பானது பாதுகாப்பாயும் , தரம் குறையாததாயும் , இயற்கையான நிறம் மாறாததாயும் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கழிவுத்தும்புதானே என்று எண்ணிவிடவே கூடாது.அந்தத் தும்பினுக்கு தண்ணீரைத் தெளித்து தரை யில் பரப்பி மூங்கில் தடியினால் நான்கு அல்லது ஐந்துபேர் சேர்ந்து தரையில் பரப்பி அடிக்க வேண்டும்.நீரை நன்றாக விட்டு தும்பினை அடித்தால்த்தான் மென்மையாக வரும். அதுமட்டு மல்ல கைக்கு வசதியாகவும் இருக்கும்.இப்படி அமைவதால் கயிறு உறிதியானதாயும் , பார்க்கக் கவர்ச்சியாகவும் அமையும் என்பது முக்கியமான கருத்தாகும்.

இப்படிப் பெறப்படும் தும்பினால் கயிறுகள் தயாரிக்கப்படுகின்றன. அந்த வகையில் வடக்கயிறு என்றால் என்ன வென்று பார்ப்போம்.இந்தக் கயிறு நான்கு பிரிவடம் , ஆறு பிரிவடம் , மூன்று பிரிவடம் , என்றுபல வகைகளில் அமைகிறது.வடக்கயிறு திருத்தலில் சில விளக்கங்கள் சொல்லப்படுகின்றன. நான்கு பிரிவடம் என்றால் நான்கு சல்லை விடவேண்டும்.ஒரு சல்லையில் நான்கு பிரிவுகள் இருக் கும்.எட்டு பிரிவடம் என்றால் அதில் எட்டு சல்லை விட வேண்டும். ஒரு சல்லையில் நான்கு பிரி இரு க்கும். மேலும் இடையில் ஒரு பிரியை தனியே விட வேண்டும்.இந்த முறைகளைக் கையாண்டு தேவையான கயிறுகளைப் பெற்றுக் கொள்ளலாம். குடிக்கயிறு பலவிதங்களில் பயன்படும் கயிறாக இருக்கிறது. கருப்பட்டிக் கொட்டான கட்டுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் பந்தல் வேலைகள் செய்யும் பொழுது சாரங்களை இணைப்புச் செய்ய வேண்டி வருகிறது. அதற்கும் இக்கயிறு பயனாகி நிற்கிறது. மேலும் - வெற்றிலைக் கூடைகளைக் கட் டவும், அளவாய் எடுக்கப்படும் தும்பினைக் கட்டவும் , பயனாகி நிற்கிறது.இவற்றைவிட இன்னுமொரு வகையிலும் பயனாகி நிற்கிறது.அதாவது , கயிறுமூலம் ஏறும் முறையில் மரத்தை இணைக்கவும்பயனாகிநிற்கிறதுஎன்பதுகுறிப்பிடத்தக்கதாகும். தென்னையின் தும்பினால் கயிறு திரிப்பதும். , அதனைப் பயன்படுத்தி வருவதுந்தான் எமக்கெல்லாம் நன்றாகவே தெரிந்த விடயமாகும். தென்னை மட்டுந்தான் கயிற்றினைத் தருகிறது என்று எண்ணி விடாதீர்கள் -பனையும் தென்னைக்கு ஈடாகத் தும்பினையும் தந்து , அதனால் கயிற்றினையும் தந்தே நிற்கிறது என்பதைக் கட்டாயம் சொல்லித்தானே ஆக வேண்டும்.ஏனென்றால் பனை கற்பகதரு அல்லவா! கேட்டதை எல்லாம் , விரும்பியதை எல்லாம் கொடுக்கும் நிலையில் விளங்குகிறதல்லவா ! பனந்தும்புக்கு நல்ல வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புகள் நிறையவே இருக்கிறது. அதுவும் கறுப்புத் தும்புக்கு சிறப்பான இடம் இருக்கிறது.இந்த வகையான தும்பினை ஒவ்வொரு இறக்குமதியாளருமே பெரிதும் விரும்பியே நிற்கிறார்கள் என்பது கருத்திருத்த வேண்டிய விடயமாகும்.உற்பத்தி அளவில் இவ்வகைத் தும்பினை எடுப்பதுதான் சிரமமாய் காணப்படுகிறது. இயற்கையாய் கிடைக்கும் பனந்தும்பினுக்குப் போட்டியாக , செயற்கை முறையினாலாகிய தும்பும் சந்தைக்கு வருகிறது. செயற்கைத் தும்பினை ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, போன்ற நாடுகள் தயாரி க்கின்றன.இப்படியான ஒரு போட்டி நிலை வெளிநாட்டுச் சந்தையில் காணப்படுவதால் -பனந்தும்பினை உற்பத்தி செய்யும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் பனந்தும்பு உற்பத்தியில் மிகவும் கவனத்தை எடுக்க வேண்டியது அவசியமான நிலையாகவே காணப்படுகிறது அத்துடன் பனந்தும்பின் மீதான தங்க ளின் கவனத்தை மிகவும் சிரத்தையுடன் அணுகவேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது என்பது மனங் கொள்ளத்தக்கதாகும்.

பனந்தும்புத் தொழிலில் தமிழ்நாட்டில் பல தொழிலாளர்கள் ஈடுப்பட்டு உழைக்கிறார்கள் என்பது முக் கிய விடயமாகும். இலங்கையில் இத்தொழிலில் காட்டப்படும் அக்கறை தமிழ்நாட்டின் அளவுக்கு இல்லை என்றுதான் அறிந்திட முடிகிறது. இத்தொழிலில் ஈடுபடுவதை சற்றுத் தாழ்வாகப் பார்க்கும் நிலையும் இதற்குக் காரணமாய் ஆகி நிற்கிறதோ என்றும் சிதிக்க வைக்கிறது. நல்ல வெளிநாட்டு வருமானத்தை ஈட்டித்தரும் வாய்ப்பு பனந்தும்புக்கு வாய்த்திருக்கிறது.

இதனைக்கருத்தில்கொள்ளுதல்அவசியமேயாகும்.பனந்தும்பினை ஏற்றுமதி செய்து முன்னிலை நின்ற நாடு என்னும் பெருமையினைத்தன்னகத்தேகொண்டுவிளங்கும்ஈழமணித் திருநாடு மீண்டும் முன்னிலைக்கு வந்திடல் வேண்டும். கற்பகதருவாம் பனை வடக்கிலும் கிழக்கிலும் வரமாய் வந்து அமைந்திருக்கிறது. உங்களுக்கு வேண்டி யதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று - வழங்கிடும் வள்ளல் தன் மையில் பனைகள் அத்தனையும் நிமிர்ந்து நிற்கின்றன என்பதையும் கருத்திருத்துவது அவசியமேயாகும்.

வளரும்




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Roty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஆட்சியாளர்கள் நாட்டைத் தாரை வார்க்கும் செயல்களில் தொடர்ந்தும் ஈடுபடுகிறார்கள்

## தம்மரத்ன தேரர் காட்டம்



ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் நாட்டைத் தாரைவார்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் இதனைத் தடுக்க மக்களுடன் இணைந்து பணியாற்றப் போவதாகவும் மிஹிந்தலை மகா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குனு தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையின் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டால் உள்ளூர் மீனவர்கள் எவ்வாறு ஜீவனேபயத்தைக் கொண்டு நடத்துவார்கள்?

இன்று முழு நாடுமே தாரை வார்க்கப்பட்டு விட்டதைப் போன்ற நிலையே உள்ளது. நிர்வாகிகள் வெளிநாடுகளுக்கு சென்று உடன் படிக்கைகளை செய்து வருகிறார்கள்.

வந்து ஒரு கிழமைக்கு பின்னரோ அல்லது ஒரு மாதத்துக்குப் பின்னரோ நாட்டு வளங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன எனவும், அடகு வைத்துள்ளதாகவும் அறிய முடிகிறது. இந்த ஆட்சியாளர்கள் நாட்டு மக்களின் அவயங்களைக் கூட விற்றுள்ளனர்.

நாட்டில் தற்போது முன்னெப்போதும் இல்லாத வகையில் மனித -யானை மோதல் அதிகரித்துள்ளது.இதற்கு முன்னர் இந்த நிலைமை காணப்படவில்லை. இருப்பினும் இன்று சடுதியாக அதிகரித்துள்ளது. காரணம் அரசாங்கத்தில் உள்ளவர்கள் வனப்பகுதிகளில் உள்ள

இடங்களை அபகரித்து அங்கு கட்டடங்களையும், ஹோட்டல்களையும், நட்சத்திர விடுதிகளையும் அமைத்துள்ளனர். இதன் காரணமாக யானைகள் வனப்பகுதிகளை விட்டு வெளியேறுகிறது. அத்தோடு அவற்றால் மக்களின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. மின் வேலிகளும் முறையாக நிர்மாணிக்கப்படவில்லை.

எனவே நாடாளுமன்றத்தில் உள்ள 225 பேருக்கும் மக்கள் முன்னிலையில் வந்து உரையாட முடியாது. அதற்கான உரிமையோ அல்லது தகுதியோ அவர்களிடம் இல்லை என்பதை நாட்டு மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல்வாதிகள் வெள;வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு முகங்களில், வெவ்வேறு கட்சிகளினூடாக வருகை தருவார்கள்.

அதற்கு நாட்டு மக்கள் ஒருபோதும் ஏமாறக்கூடாது. மக்களுடன் இணைந்து மோசமான ஆட்சியாளர்களிடத்திலிருந்து நாட்டை மீட்பதற்கு நாம் தொடர்ந்தும் செயற்படுவோம். - என்றார். (05)

# மீகொடவில் மிளகாய் பொடி தூவி 45 லட்சம் ரூபா கொள்ளையடிப்பு

நேற்று (திங்கட்கிழமை) அதிகாலையில் மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில் தனது வியாபாரத்தை முடித்துவிட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வர்த்தகர் ஒருவரை மிளகாய்ப் பொடியால் தாக்கி அவரிடம் இருந்து சுமார் 45 லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

வர்த்தகர் நேற்று காலை வர்த்தக இடத்தை மூடிவிட்டு தனது ஓட்டோவில் மற்றுமொரு ஊழியரை அழைத்துக்கொண்டு மீகொட தம்ம மாவத்தை பகுதியில் உள்ள அவரது வீட்டிற்கு செல்லும் வழியில் மெகொட சிறிரத்தன மாவத்தையில், ஓட்டோவில் வந்த ஒருவர் மிளகாய்ப் பொடியை வர்த்தகர் முகத்தில் தூவிவிட்டு அவரிடமிருந்த பணப் பொதியுடன் தப்பிச்சென்றுள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# பிரிந்து சென்ற கணவரால் மனைவி குத்திக் கொலை

ராஜாங்கனை, பிரதேசத்தில் வசித்து வந்த 53 வயதுடைய பெண் ஒருவரை, பிரிந்த கணவன் எனக் கூறப்படும் நபர் கத்தியால் குத்திக் கொலை செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளார் என தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரேணுகா தீபானி என்ற பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் மார்புப் பகுதியில் இரண்டு கத்திக்குத்து காயங்களும் கை பகுதியில் காயமும் காணப்பட்டன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஆபத்தான நிலையில் இருந்த பெண், ராஜாங்கனை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார்,தப்பிச் சென்ற சந்தேக நபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து மேற்கொள்கின்றனர் என மேலும் தெரிவித்துள்ளனர்.

(05)



## உயர் ....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

என்னவென்று கோரும் நிலை ஏற்பட்டு விடும் என்றார்.

சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவிக்கையில், நாட்டின் நீதித்துறை சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக நாட்டின் அனைத்துப் பாகத்திலிருந்தும் நாம் வருகை தந்திருக்கின்றோம்.

இதனை சர்வதேசமும் கவனத்தில்கொண்டுஅழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும். நாட்டின் நீதித்துறையானது சுயாதீனமாகச் செயற்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.

## முதல் 8....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிகள் காரணமாக விமான சேவைகள் பல சிரமங்களை எதிர்கொண்டிருந்தன. கொவிட் தொற்றுநோய் காரணமாக, விமானங்கள் நிறுத்தப்பட்டன. மேலும் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் குறைவாகவே காணப்பட்டது.டொலர்நெருக்கடியால் முழு விமானப் போக்குவரத்துத் துறையும் பெரும் நெருக்கடியைச் சந்தித்தன.

டொலர் நெருக்கடியால் விமானங்களுக்கு எரிபொருள் கிடைப்பதுகூட கடினமாக இருந்தது. ஒரு விமானத்தை சென்னைக்கு அனுப்பி மற்றொரு விமானத்திற்கு எரிபொருளைக் கொண்டுவரும்நிலைகாணப்பட்டது. ஆனால், பெற்றோலியத் துறை அமைச்சரும், நானும் தலையிட்டு, விமானங்களுக்கான எரிபொருள் இறக்குமதியை தனியாரிடம் கொடுத்ததன் மூலம், தட்டுப்பாடின்றி விமானங்களுக்கு எரிபொருள் கிடைக்கும் சூழல் உருவானது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நவீன தொழில்நுட்பத்துடன் அபிவிருத்தி செய்ததன் காரணமாக, தென்கிழக்கு ஆசியாவின் சிறந்த விமான நிலையங்களில் ஒன்றாக சர்வதேச விமானப்போக்குவரத்துஅதிகாரசபை பெயரிட்டுள்ளது. அதேநேரம், இலங்கைக்கு வரும் பல்வேறு விமான நிறுவனங்களுக்கு சொந்தமான விமானங்களுக்கான சேவைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளன.

எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் வாரத்திற்கு 28 விமான சேவைகளையும், சீனா ஈஸ்டன் ஏர் வாரத்திற்கு 5 விமானசேவைகளையும்,எதிஹாடர் 6 விமான சேவைகளையும், கத்தார் ஏயார் 35 விமானசேவைகளையும், ஏர் அரேபியா 11 விமான சேவைகளையும், ஏர் இந்தியா 17 விமான சேவைகளையும், ஜசீரா ஏர் 4 விமான சேவைகளையும் முன்னெடுத்துவருகின்றன. மேலும் பலவிமானநிறுவனங்கள்இலங்கை ஊடாக தமது சேவைகளைத் தொடங்க இணங்கியுள்ளன.

பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகள் மிகவும் வெற்றிகரமாகத் தொடர்கின்றன. சென்னை மற்றும்பலாலி இடையேவாரத்திற்கு மூன்று சேவைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டதோடு இதுவரை 200 விமான சேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கொரோனாமற்றும்பொருளாதார நெருக்கடி காரணமாக பயணிகள் அற்றவலயமாகஇருந்தகட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையம் தற்போது பரபரப்பான விமான நிலையமாக மாறி வருகிறது. பண்டாரநாயக்க விமான நிலையம் கடந்த ஓகஸ்ட் மாதம் 650,000க்கும் அதிகமான பயணிகளுக்கு சேவைகளை வழங்கியுள்ளது.

விமான சேவைகளை வழங்குவதன் மூலம் இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் 22 பில்லியன் ரூபா இலாபத்தை ஈட்ட முடிந்துள்ளது. அதில் பத்து பில்லியன் ரூபாவை திறைசேரிக்கு வழங்கியுள்ளோம்.

மத்தள விமான நிலையத்திற்கு முதலீட்டாளர்களை ஈர்க்கும் வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன் செயல்பாட்டு இழப்புகளை குறைக்க ஏற்கனவே ஒரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஸ்ரீலங்கன் விமான சேவையை மறுசீரமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அந்த திட்டத்தை திறைசேரிக்கு அனுப்பிய பின்னர், உலக வங்கியுடனும் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இதன்படி, ஸ்ரீலங்கன் விமான சேவையை மறுசீரமைப்பதற்கான வெளிப்படைத்தன்மையை உருவாக்க சர்வதேச ஆலோசகர் ஒருவரின் உதவியை நாடப் பரிந்துரைக்கப்பட்டது.

புதியஆலோசகர்நியமிக்கப்பட்டு, ஸ்ரீலங்கன் விமான சேவையை விரைவாக மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திட்டமிட்டபடி பணிகள் நடந்தால், அடுத்த ஆண்டு பெப்ரவரிக்குள் எதிர்பார்க்கும் பயன்களைப் பெறலாம்.

தற்போது எங்களிடம் எந்த விமானமும் இல்லை. அனைத்து விமானங்களும் குத்தகைக்கு எடுக்கப்பட்டவையாகும். ஏ - 330 விமானங்கள் இல்லாததால் இங்கிலாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியாஆகியநாடுகளுக்குவிமான சேவைகளைநடத்தமுடியவில்லை. தற்போது குத்தகைக்கு எடுத்துள்ள அனைத்து விமானங்களும் ஏ320 விமானங்களாகும். அந்த விமானங்களைக் கொண்டு தூர இடங்களுக்குசேவைமேற்கொள்ள முடியாது. எனவே, விமான நிறுவனத்தை மறுசீரமைப்பதன் மூலம் இதுபோன்ற பல சிக்கல்களைத் தீர்க்க முடியும்.

அண்மையில் விமானம் தாமதம் காரணமாக ஏற்பட்ட இழப்பு 6 பில்லியன் டொலர்கள். விமானங்களின் தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே தாமதம் ஏற்பட்டதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் ஒரு விமானியால் விமானப் பொறியாளரின்சான்றிதழ்இல்லாமல் விமானத்தை செலுத்த முடியாது. குற்றச்சாட்டுகளை முன்வைப்பதை விடுத்துவெற்றிகரமாகமுன்னோக்கிச் செல்வதற்கான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒரு விமானிக்கு 4 மில்லியன் ரூபா (40 லட்சம்) மாத சம்பளம் வழங்கப்படுகிறது. உலகில் உள்ள முன்னேற்றகரமானவிமான நிறுவனங்கள்வழங்கும்சம்பளத்தை விட அதிக சம்பளம் கேட்கிறார்கள். ஆனால்தற்போதையநிலைமையில் அது சாத்தியமில்லை - என்றார்.

## ஆளும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஒழுங்கு முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. கொலை, கொள்ளை மற்றும் மனித கடத்தல் ஆகியன பகிரங்கமாகவே இடம் பெறுகிறது.

நிறைவடைந்த ஒன்பது மாத காலத்திற்குள் மாத்திரம் 80 இற்கும் அதிகமானதுப்பாக்கிச்சூடுசம்பங்கள் பதிவாகியுள்ளன. 40 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

சமூகக் கட்டமைப்பின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸ் தரப்புக்கு கட்டளை பிறப்பிக்க நிலையான ஒரு தலைமைத்துவம் இல்லாத நிலை காணப்படுகிறது.

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவின் பதவி காலம் கடந்தமார்ச்மாதம்நிறைவடைந்ததன் பின்னர் அவருக்கு ஆறுமாத கால சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்ட இரண்டாவது சேவை நீடிப்பு காலம் நேற்றுடன் நிறைவு பெற்றது.அரசமைப்புப்பேரவையின் அனுமதியுடன் புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பது நடப்பதாகத் தெரியவில்லை.

ஆளும் தரப்பின் உள்ளக முரண்பாடுகளினால் புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்ந்து இழுபறி நிலையில் காணப்படுகிறது. பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு மேலும் சேவை நீடிப்பு வழங்காமல் அரசமைப்புப் பேரவையின் அனுமதியுடன் புதிய பொலிஸ்மா அதிபரை நியமிக்க வேண்டும்.

புதிய பொலிஸ்மா அதிபரை நியமிக்காமல் ஓய்வு பெற்றவருக்கு தொடர்ந்துசேவைநீடிப்புவழங்குவது அரச நிர்வாக கட்டமைப்பின் மீதான மக்கள் நம்பிக்கையை பலவீனப்படுத்தும் என்றார்.

## நிகழ்நிலை....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின்தலைவர்அநுரகுமார திஸாநாயக்க உட்பட எதிர்க்கட்சியை சேர்ந்த பலரும் பொய்ப் பரப்புரை செய்துவருகின்றனர்.

வீழ்ச்சியடைந்திருந்த இந்த நாட்டை ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்காமல் இருந்திருந்தால் இவர்கள் யாருக்கும் நாட்டில் இருப்பதற்கு முடியாமல் இருந்திருக்கும். அத்துடன் நாட்டின் எந்த நடவடிக்கையை முன்னெடுத்தாலும் அது முறையாக ஒழுங்கமைக்கப்படவேண்டும்.

போக்குவரத்து துறையை எடுத்துக்கொண்டால் வீதியில் வாகனம் செலுத்துவதற்கு என ஒரு ஒழுங்கமைப்பு இல்லாவிட்டால் வீதியில் வாகனங்களுக்கு பாதுகாப்பாக பயணிக்க முடியாமல் இருந்திருக்கும். அதனால்தான் போக்குவரத்து சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியுமாக இருக்கிறது.

அதன் பிரகாரம் நிகழ்நிலை காப்புசட்டமூலம்சமூகவலைத்தளங்களை ஒழுங்குபடுத்துவதற்கே கொண்டுவரப்படுகிறது. இதன்மூலம் சமூகவலைத்தளங்களின் மூலம் ஏற்படுகின்ற குற்றச்செயல்களை கட்டுப்படுத்தமுடியுமாகிறது. மக்களின் உரிமைகளை பாதுகாக்கவே இந்த சட்டமூலத்தை கொண்டுவர இந்த ஆட்சி தீர்மானித்திருக்கிறது.

இதன் மூலம் ஊடகங்களுக்குத் தடைகளை ஏற்படுத்தவோ சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதை தடுப்பதற்கோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லை. சமூகவலைத்தளங்களில் பிரசுரிக்கப்படும் செய்திகளுக்கு வகைபொறுப்பு ஏற்படுகிறது.

அதனால் நிகழ்நிலை காப்பு சட்டமூலம் ஊடாக சமூகவலைத்தளங்களை ஒழுங்குபடுத்துவதற்கானதே தவிர ஊடகங்களை அடக்குவதற்காக கொண்டுவரப்பட்டதல்ல. அவ்வாறான எந்த விடயங்களும் அதில் இல்லை. அதேபோன்று மனித உரிமை மீறக்கூடிய எந்த விடயங்களும் அதில் இல்லை - என்றார்.

## கடன் மறுசீரமைப்புத்....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.

மறுசீரமைப்பு மூலம் அதன் வெளிநாட்டுக் கடனை 17 பில்லியன் அமெரிக்க டொலர்கள் குறைப்பதே அரசாங்கத்தின் இலக்காகும். இருப்பினும், இந்த செயல்முறை எவ்வளவு காலம் எடுக்கும் அல்லது மறுசீரமைப்பின் இறுதி விதிமுறைகள் என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை.

கடன்மறுசீரமைப்புதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில்இலங்கை அரசாங்கம் பல சவால்களை எதிர்கொள்கிறது. மறுசீரமைப்பின் விதிமுறைகளைஅதன்கடனாளிகள் அனைவரும் ஒப்புக்கொள்வது என்பது முக்கியமானதொரு சவாலாகும். மற்றொரு சவாலானது உள்நாட்டுப் பொருளாதாரத்தில் மறுசீரமைப்பின் சாத்தியமான தாக்கமாகும்.

அனைத்து கடன் வழங்குநர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், உள்நாட்டுப் பொருளாதாரத்தில் மறுசீரமைப்பின் தாக்கத்தைக் குறைப்பதற்கும் தாம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது. இருப்பினும், இந்த இரண்டு இலக்குகளையும்எவ்வாறு அடைய முடியுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

அக்டோபர் 9, 2023 வரை, இலங்கை ஆளும் தரப்பு அதன் கடன் மறுசீரமைப்பு திட்டங்களை செயள்படுத்துவதில் இன்னும் பின்தங்கியுள்ளது. மறுசீரமைப்பு செயல்முறையை முடிப்பதற்கு பல மாதங்களாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், அரசாங்கம் அதன் சர்வதேச நாணய நிதியத்தின்-ஆதரவு சீர்திருத்தத் திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது, இதுபொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதையும், நிலையான வளர்ச்சிக்கு வழி வகுக்கும் நோக்கத்தையும் கொண்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களின்வெற்றி இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு முக்கியமானதாகும். அரசாங்கம்தனதுகடனை வெற்றிகரமாக மறுசீரமைக்க முடிந்தால், அதன்கடன் சுமையை குறைக்க முடியும். அத்தியாவசிய சேவைகள் மற்றும் உள்கட்டமைப்புகளில் முதலீடு செய்வதற்கான வளங்களை விடுவிக்க முடியும் என்றார்.

## தனிப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன, சர்வதேச தர நிர்ணய அமைப்பின் சான்றளிக்கப்பட்ட கணக்காய்வாளரும் தொழில்நுட்ப முகாமைத்துவநிபுணருமானபிம்சர செனவிரத்ன, பொறியியல் மற்றும் டிஜிட்டல் மூலோபாய நிபுணர் ஷெஹான் விஜேதிலக ஆகியோர் பணிப்பாளர்சபைஉறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2022ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இலங்கையின் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம். 19 மார்ச் 2022 ஆம் திகதி சபாநாயகரால் சான்றளிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. இதன் மூலம் தெற்காசியப் பிராந்தியத்தில் தனிப்பட்ட தரவுகளைப்பாதுகாப்பதற்காகசட்டம் இயற்றிய முதல் நாடாக இலங்கை மாறியுள்ளது.

21 ஜூலை 2023 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இதன் ஐந்தாவது பகுதியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டம், கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இதன் மூலம், அரசு நிறுவனங்கள், வங்கிகள், தகவல் தொடர்பாடல்செயல்பாடுகள் மற்றும் வைத்தியசாலைகள் உள்ளிட்ட நிறுவனங்கள் பொதுமக்களின் தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும்இந்ததனிநபர்தரவுபாதுகாப்பு சட்டமானது தனியுரிமைச்சட்டத்தின் உலகளாவிய முன்னேற்றத்திற்கும் அரசு மற்றும் தனியார் துறையின் டிஜிட்டல் மூலோபாயங்களுக்கும் அமைவாக மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

தேசிய டிஜிட்டல் மூலோபாயம் மற்றும் இலங்கையின் தனித்துவ டிஜிட்டல் அடையாள திட்டத்துடன் இணைந்து, முதலீட்டை ஈர்ப்பது மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த சுயாதீன மேற்பார்வை பொறிமுறையின் ஊடாக தனிப்பட்ட தரவுகளின் சரியான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தும்வகையில்பல்வேறு துறைகளில் உள்ள மேற்பார்வை தரப்பினர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட எதிர்பார்க்கப்படுகிறது.

2019ஆம் ஆண்டு முதல் இந்த சட்டத்தைஉருவாக்கும்செயல்முறை பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்பட்டு வெளிப்படைத் தன்மையுடன் தொடங்கப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 2022நவம்பரில்நாடாளுமன்றத்தில் தனதுவரவுசெலவுத்திட்ட உரையில் தரவு பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தியதோடு 2023 இல் தரவு பாதுகாப்பு அதிகார சபையை உருவாக்குவார் என்றும் உறுதியளித்திருந்தார்.




காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவின் முன்மொழிவுகளை இலங்கை இரத்துச்செய்யாவிட்டால் களப்பலி ஏற்படும்

## கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதி தெரிவிப்பு

இலங்கை கடலில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பது என்ற இந்திய தரப்பின் முன்மொழிவை இலங்கைஅரசாங்கம்இரத்துசெய்ய வேண்டும். அல்லது நாடளாவியரீதியில் போராட்டம் வெடித்து, கடலில் முரண்பாடுகள்ஏற்பட்டுகளப்பலிகள் ஏற்படும் என வடக்கு மாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் தலைவர் எம்.பி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது நாட்டு மீனவர்கள் தொடர்ந்தும் இந்திய இழுவை படகுகளின் வருகையால் மிகவும் துன்புற்று இருக்கின்ற இந்த வேளையிலே நாம் பல போராட்டங்கள்பலகலந்துரையாடல்களை நடத்தி வெற்றி காணாத நிலையில் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்திலே, ஓரிரு தினங்களுக்கு முன்னர் எமது நாட்டு பிரதமர் அவர்கள் இந்தியா சென்றிருந்த வேளையிலே எமது வீரர்களுடைய பிரச்சினை சம்பந்தமாக அங்கு ஒரு கலந்துரையாடல்நடந்திருக்கின்றது.

அங்கிருந்த டைம்ஸ் பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவருடைய கேள்விக்கு நமது நாட்டு பிரதமர் அவர்கள் பதில் அழைத்து இருக்கிறார். அந்த கேள்வியானது இலங்கை கடற்பரப்புக்குள்ளே இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பது சம்பந் தமாக முன்மொழிக்கப்பட்டிருக்கின்றது. அது சம்பந்தமாக உங்களுடைய நிலைப்பாடு என்ன என்று கேள்வி எழுப்பின போது, எமது பிரதமர் அவர்கள் அளித்த பதிலாவது -

இலங்கையின் வடக்கு கடல் மிகவும் நல்ல மீன்பிடி மையமாக இருக்கின்றது. அதன் காரணமாக இந்தியாவில் உள்ள மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள்ளே மீன் பிடிப்பதற்கு இந்தியாவால் முன்னொளியப்பட்டிருக்கின்றது. அது சம்பந்தமாக நாம் கரிசனையோடு ஆய்வு செய்து வருகின்றோம்.

இது இரு நாட்டு அரசுகளும் பேசித் தீர்க்கக் கூடிய ஒரு விடயம் அல்ல. இது மீனவர்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினை. எனவே மீனவர்கள் தான் இதைப் பற்றி பேசி ஒரு நல்ல இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். எனவே இருநாட்டு மீனவர்களும் புரிந்துணர்வுடன் பேசி நல்ல ஒரு கருத்தையும் இணக்கப்பாட்டையும் எட்ட வேண்டும் என்றும், அந்த வகையில் இந்த முன்மொழிவுக்கு ஒரு விடை கிடைக்கும் என்ற கருத்து வெளியிடப்பட்டிருக்கின்றது.

அவர் பேசியிருக்கின்ற பேச்சின் பிரகாரம் இலங்கை கடற்பிறப்புக்குள்ளே இந்திய மீனவர்களை மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பதற்கான ஒரு தொனி அங்கே தெளிவாக தென்படுகின்றது. இது இலங்கை வடபுலத்திலே வாழுகின்ற மீனவர்களுக்கு ஓர் ஏமாற்றத்தை தந்துள்ளது.

எமது கடற்பரப்புக்குள்ளே அந்நிய மீனவர்கள் அல்லது இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பது என்பது காலம் காலமாக எமது மீனவர்களிடையே ஒரு முரண்பாட்டையும் ஒரு களப் போரையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

வளங்களை அழிக்கின்றார்கள் வாழ்வாதாரத்தை சூறையாடுகின்றார்கள். அதற்கப்பாலே எங்களது தொழில் உபகரணங்களை அறுத்து நாசமாக்கி எங்களுக்கு பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்துகின்றார்கள்.

இந்த வகையிலே கடந்த 2016 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற பேச்சின் போது இந்திய மீனவர்களாலும், இந்திய தமிழ்நாட்டு அமைச்சர்களாலும், இந்திய மத்திய அரசு அமைச்சர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயம், இழுவைமடி தொழிலை முற்றாக ஒழிக்க வேண்டும், எல்லை தாண்டி செல்லுகின்ற மீனவர்களைக் கண்காணிப்பதற்காக இருநாட்டு கடற்படையும் ரோந்து பணியில் ஈடுபடுவது சம்பந்தமாக ஆராயப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அது அறிக்கையாக்கப்பட்டிருக்கின்ற வேளையிலே எமது பிரதமர் சொன்ன கருத்து, அவருடைய உடன்பாடு எமக்கு வேதனையைத் தருகின்றது.

இலங்கையின் வடபுலத்திலே இருக்கின்றபலதரப்பட்ட இடங்களை இந்தியாவிற்கு தாரை வார்த்து கொடுக்கிறார்கள். அதானி குழுமம் இப்போது வடபுலத்திலே ஆளுமை செலுத்திக் கொண்டிருக்கின்றது. அது தவிர இன்று கடல் வளத்தைக் கொடுப்பதற்கும் அரசாங்கம் எத்தணிக்கின்றது. இதுகடற்தொழில் மக்களுக்கு பெரிய ஏமாற்றத்தை தந்திருக்கின்றது.

இருந்தாலும் நாம் இந்த விடயத்தை அரசாங்கம் முன்னெடுக்கும் பட்சத்திலே இதனைக் வன்மையாக கண்டிக்கிறோம். இந்த விடயத்திலே அரசாங்கம் முன்னின்று எமது கடலையும் கடல் வளத்தையும் இந்தியாவுக்கு கையளிக்குமேயானால் யாழ்ப்பாண நகரில் மட்டுமல்ல தலைநகரிலும், நாடகவிழாவிய ரீதியில் கடத்தொழில் மக்கள் வாழுகின்ற 15 மாவட்டங்களிலும் இந்த போராட்டத்தை நாங்கள் நடத்தி இதனை முறியடிப்பதற்கு மிகவும் கரிசனையாக இருக்கின்றோம். இதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த விடயத்திலே மிகவும் குறிப்பாக வடக்கு கிழக்கு இருக்கின்ற மீனவர்களுடைய வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு இந்திய படகுகளை எமது எல்லைக்குள்ளே வரவிடாது தடுப்பதற்கு முன்வர வேண்டுமே தவிர இதை விட்டு எங்களது கடல் வளத்தைக் கொடுப்பதாக இருந்தால் வடபுலத்தில் இருக்கின்ற அனைத்தையும் அவர்கள் கையளித்துவிட்டு எம்மையும் இந்தியாவிற்கு தாரை வார்த்து கொடுத்துவிட்டு, இந்த வடக்கு மாகாணத்தையும் இந்தியாவிடம் கையளித்து விட்டால் நாங்கள் ஓரளவு நிம்மதியாக வாழக்கூடிய சூழல் ஏற்படும்.

எனவே அரசாங்கம் இந்த கடல் வளத்தைக் கையளிப்பதை மீள் பரிசீலனை செய்துவிட்டு எமது கடல் வளத்தை எம்மிடமே தந்து தவ வேண்டும். ஒரு தவறான முடிவெடுத்து எம்மை அனாதைகளாகி விட வேண்டாம் என்பதை மிகவும் அன்பாக அரசாங்கத்திடம் கேட்டு, இந்தியாவிடம்எமதுகடல்வளத்தைக் கையளிக்கின்ற முன்மொழிவு இரத்து செய்து அதன் ஊடாக எமது வாழ்வாதாரம் சிறக்க அரசாங்கம் எமக்கு கை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

பிரதமர், வடபுலத்திலே வாழ்கின்ற மீனவர்களுடைய வேதனைகளும், துன்பங்களும், அவர்களுடைய இடர்பாடுகளும் புரியாத ஒரு புதியவராக இருக்கின்றபடியால் இதுவரை காலமும் இல்லாத ஒரு கருத்தை அவர் முன்வைத்திருக்கின்றார்.

எனவே இந்தியா கேட்டிருக்கின்ற முன்மொழிவை உடனடியாகக் கைவிட வேண்டும் இல்லையேல் நாடளாவிய ரீதியில் போராட்டம் வெடிக்கும். இந்த போராட்டத்தின் ஊடாக கடலிலே பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டு, களப் பலிகள் ஏற்பட வாய்ப்பு இருக்கும் என்பதை இச்சந்தர்ப்பத்திலே எச்சரிக்கையாக விடுகின்றோம் - என்றார். (05)

# நஸீர் அஹமட்டின் கட்சி உறுப்புரிமை நீக்கத்துக்கான உயர்நீதிமன்ற தீர்ப்பு கட்சி தாவுவோருக்கு எச்சரிக்கை

## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு



அமைச்சர் நஸீர் அஹமட்டின் கட்சி உறுப்புரிமை நீக்கம் சரியானது என உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரலாற்று சரித்திரம் மிக்கதாகும்.

இடைக்கிடையே அரசியல் இலாபங்களுக்காகக் கட்சி தாவும் தரப்பினருக்கு நீதிமன்றம் விடுத்துள்ள அபாய எச்சரிக்கையாகவே இது காணப்படுகிறது.

எதிர்காலத்தில் இவர்களைப் போன்றவர்களுக்கு இந்தத் தீர்ப்பு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமையும் என எதிர்க் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முஜுபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

குருதூர்மலை விவகாரத்தை முன்னிறுத்தி பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதற்குக் கடந்த காலங்களில் பல சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனை தொடர்ந்து மட்டக்களப்பு காணிப்பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சித்தனர். சமூக ஊடகங்களின் மூலமாகவும் இனங்களுக்கு இடையில் பிரச்சினையை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது நாட்டில் மீண்டும் இனவாதத்தை தோற்றுவிக்க சிலர் முயற்சித்து வருகின்றனரா என்ற சந்தேகம் எழுவதாகத் தோன்றுகின்றது. ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் 7, 8 மாதங்களே காணப்படும் நிலையில் இவ்வாறான பிரச்சினைகள் ஏன் தோற்றுவிக்கப்படுகிறது என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

மேலும் கட்சியின் தீர்மானங்களுக்கு மாற்றமாக செயற்பட்டமை தவறு என நஸீர் அஹமட் விவகாரத்தில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

இதன்காரணமாக அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை இல்லாமல் போகும். இடைக்கிடையே கட்சி தாவும் தரப்பினருக்கு உயர் நீதிமன்றம் விடுத்துள்ள அபாய எச்சரிக்கையாக இதை நாம் கருதுகிறோம். குறிப்பாக கட்சியிலிருந்து பலர் அமைச்சு பதவிகளுக்காகச் சென்றார்கள்.

இவர்களுக்கு எதிராகவும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வரலாற்று சரித்திரம் மிக்க தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

விருப்பு வாக்கு வழங்குவதற்கு முன்னதாக கட்சிக்கே வாக்களிக்க வேண்டும். கட்சி எடுக்கும் தீர்மானங்களுக்கு கட்டுப்படவேண்டும்.

கட்டுப்பட முடியாவிட்டால் பதவியில் இருந்து விலகவேண்டும். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்குகளைப் பெற்று விட்டு பின்னர் நாடாளுமன்றத்தில் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவாக செயற்பட நாட்டு மக்கள் வாக்களிக்கவில்லை. நஸீர் அஹமட் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எதிர்காலத்தில் மேலும் பலருக்கு படிப்பினையாக அமையும்.

இதேவேளை, கொள்ளுப்பிட்டி விபத்தின் போது உயிரிழந்தவர்களுக்கு 5 லட்சம் ரூபா நட்டஈடு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் இடம்பெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அரசாங்கத்தால் பிற்போடப்பட்டிருந்தது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உரிய முறையில் இடம்பெற்றிருந்தால் ஒவ்வொரு சபைக்கும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பார்கள். குறித்த பகுதிகளில் காணப்படும் குறைபாடுகளைக் இனங்கண்டு சரி செய்திருப்பார்கள். எவ்வாறாயினும் இன்று நாட்டில் காணப்படும் உள்ளூராட்சி சபைகளுக்கு உறுப்பினர்கள் இல்லாமல் இருப்பதால் பரிபாலனம் செய்வதற்கு முடியாமல் போயுள்ளது. - என்றார். (05)

# இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர் காயம்

இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர் ஒருவர் ஹமாஸ் நடத்திய வான்வழித் தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இஸ்ரேலில் உள்ள ஹோட்டலில் வேலை பார்த்து வந்த அவருக்கு ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோதலின் போது ஒரு கை மற்றும் அவரது வயிற்றில் காயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலின் போது மற்றுமொரு இலங்கையர் காணாமல் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கை தூதரகம் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# இந்த ஆண்டில் இதுவரை 1,638 வாகன விபத்துகள்

## 1,733 பேர் பலி




வீதிகளில் கடமையில் ஈடுபடுகின்ற பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் வாகனத்தை செலுத்துமாறு வானக சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து கருத்துரைத்த, பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

கொழும்பு - சுதந்திர சதுக்கத்துக்கு அருகில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விபத்தில் உயிரிழந்த நிலையில் பொலிஸார்; இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அதேநேரம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 638 வாகன விபத்து சம்பவங்கள் பதிவாகியுள்ளன என பொலிஸ் ஊடக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விபத்துகளில் ஆயிரத்து 733 பேர் பலியாகியுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(05)

# பெண் கிராம அலுவலரின் கைப்பை பெருமளவு பணத்துடன் கொள்ளை

பெண்கிராமஅலுவலரிடம்இருந்துபெருந்தொகைப்பணம்கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் உரும்பிராய்ப் பகுதியில் சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

உரும்பிராயிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குஅருகில்உள்ளஉரும்பிராய் சந்தி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பெண் கிராம அலுவலர் அணிந்திருந்த கைப்பையை, மோட்டார்சைக்கிளில் வேகமாகப் பயணித்த இரண்டு இளைஞர்கள் அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் கிராம அலுவலரால் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கைப்பைக்குள் அலைபேசி மற்றும் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா பணம் என்பன இருந்தன என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இது குறித்து மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

JRIDE
BEYOND THE ROAD

# ஜே ரைட்
## ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA




ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!






இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

Google Play
App Store



JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

+94 21 222 8358

காலைக்கதிர் Kalaikkathir

# பிரதான 3 அரச நிறுவனங்களுக்கு 2024 தொடக்கம் வருமான இலக்கு

## ஜனாதிபதி தீர்மானம்



உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகியவற்றை வினைத்திறனாக்கும் வகையில் 2024ஆம் ஆண்டு முதல் இவற்றுக்கு வருமானத்தை ஈட்டுவதற்கான இலக்குகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த திணைக்களங்கள் வருடத்துக்கு ஈட்ட வேண்டிய வருமானம் உள்ளிட்ட இலக்குகள் வழங்கப்படவுள்ளன.

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக மேற்குறிப்பிடப்பட்ட திணைக்களங்கள் முறையாக செயற்படவில்லையென்று சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது. அதற்கமைய அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதில் இந்த பலவீனமாக செயற்பட்டு வருகின்றமையை அரசாங்கம் அவதானித்துள்ளது.

இந்தத் திணைக்களங்களில் உள்நாட்டு இறைவரி திணைக்களம் மிகவும் பலவீனமானதாகக் காணப்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய குறித்த திணைக்களங்கள் 2024 இலிருந்து அரசாங்கத்தால் வழங்கப்படும் இலக்கிற்கு அமைய செயற்பட வேண்டும் என்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்வாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து 1667 பில்லியன் ரூபாவும், இலங்கை சுங்கத்திடமிருந்து 1217 பில்லியன் ரூபாவும், மதுவரித் திணைக்களத்திலிருந்து 217 பில்லியன் ரூபா என்ற வகையில் 3101 பில்லியன் ரூபா வருமான இலக்கை அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

ஆனால் முதல் அரையாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சுமார் 956 பில்லியன் ரூபாவையும், இலங்கை சுங்கம் சுமார் 578 பில்லியன் ரூபாவையும், மதுவரித் திணைக்களம் சுமார் 109 பில்லியன் ரூபாவையும், மொத்தமாக சுமார் 1643 பில்லியன் ரூபாவை மாத்திரமே வருமானமாகப் பெற்றுள்ளன.

அதற்கமைய இந்த வருட இறுதிக்குள் சுமார் 2380 பில்லியன் ரூபாவை மாத்திரமே உரிய இலக்கில் இருந்து பெற முடியும் என அரசாங்கம் நம்புகிறது. இதனால் 637 பில்லியன் ரூபா பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வாறான நிலைமை அடுத்த வருடத்திலும் ஏற்படாமல் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மட்டக்களப்பில் இரு உயிர்களை காவு வாங்கியது ரிக் - ரொக்

மட்டக்களப்பு நாவலடி பகுதியில் வாவிப்பகுதியில் ரிக் - ரொக் செய்வதற்காக தோணியில் சென்றபோது தோணி கவிழ்ந்ததில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன் நான்கு பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட நாவலடி பகுதியிக்கு சீலாமுனைப்பகுதியிலிருந்து ஆறு இளைஞர்கள் தோணி ஊடாக வந்துள்ளனர்.

அப்பகுதியில் ரிக்-ரொக் செய்துவிட்டு தோணியில் மீண்டும் சீலாமுனைக்கு திரும்பிக்கொண்டிருக்கும்போது தோணி கவிழ்ந்துள்ளது. இதன்போது இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன் நான்கு பேர் பிரதேச மக்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இதன்போது மட்டக்களப்பு சீலாமுனைப்பகுதியை சேர்ந்த 19 வயதுடைய தவசீலன் கிருஸாந்த், மாமாங்கம் பகுதியை சேர்ந்த 18 வயதுடைய பிரபாகரன் பிருஜனன் ஆகியோர் வாவியில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நீரில் மூழ்கிய இளைஞர்களை மீனவர்களும் பொலிஸாரும் இணைந்து மீட்டுள்ளதுடன் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# தேன் எடுக்கச் சென்ற இளைஞர் பாறையில் வழுக்கி விழுந்து சாவு

தேன் எடுப்பதற்காக வனப்பகுதிக்கு சென்ற இளைஞர் ஒருவர், கற்பாறையில் இருந்து வழுக்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதோவ கீழ்ப்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமது ஊரில் இருந்து 2 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வனப்பகுதியில் தேன் எடுப்பதற்காக ஞாயிற்றுக்கிழமை மாலை மூவர் சென்றுள்ளனர்.

இந்நிலையில், உயிரிழந்த இளைஞர் கற்பாறை பகுதியில் இருந்த தேனில் கால் வைத்து வழுக்கி சுமார் 100 அடி பள்ளத்தில் விழுந்துள்ளார்.

பின்னர் மீட்கப்பட்டு இளைஞர் ஓட்டேவில் பசறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் வரும் வழியிலேயே உயிரிழந்துவிட்டார் எனக்கூறியுள்ளனர்.

சடலம் பசறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது, பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும்.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மடுல்சீமை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# கொலைமுயற்சியில் கைதான சிப்பாய்கள் இருவரும் பாதாள உலக தலைவர் விதுரவின் உதவியாளர்களாம்

வர்த்தகர் ஒருவரை கொலை செய்யும் நோக்கில் மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவ சிப்பாய்கள் இருவர் எல்பிட்டியவில் வைத்து 9 மில்லிமீற்றர் பிஸ்டல் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவ சிப்பாய்கள் என சந்தேகிக்கப்படும் இருவரும் பாதாள உலக தலைவர் ரத்கம விதுரவின் உதவியாளர்கள் என தற்போது தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், குறித்த வர்த்தகரைக் கொலை செய்வதற்காக அவரது வர்த்தக இடத்திற்கு அருகில் வந்திருந்த போதே சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ வீரர்கள் என சந்தேகிக்கப்படும் இருவரும் விடுமுறைக்காக தமது ஊர்களுக்கு சென்று கொஸ்கொட சுஜீயின் நெருங்கிய உறவினரான குறித்த வர்த்தகரை கொலை செய்யும் நோக்கில் அங்கு சென்றுள்ளனர் என எல்பிட்டிய பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நாட்டின் சீரற்ற காலநிலையால் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்

சீரற்ற காலநிலையால் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளதாக பொது சுகாதார சங்கம் தெரிவித்துள்ளது.

எலிக்காய்ச்சலைத் தடுப்பதற்கான முன் சிகிச்சையை மக்களுக்கு வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாக அதன் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும் வெள்ள நிலைமையால் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# 4 பிள்ளைகளின் தந்தை மாயமாம்

வவுனியா, முருகனூர் கிராமத்தைச் சேர்ந்த அன்டன் ஜொன்சன் என்பவரை கடந்த 4 ஆம் திகதியில் இருந்து காணவில்லை என அவரின் மனைவி, சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த நபர் வீட்டை விட்டு வெளியேறிய வேளை நீல நிறம் சரமும், இளம் சிவப்பு நிற சட்டையும் அணிந்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவரை கண்டவர்கள் உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது 0776289460 (மகன்), 0774136383 (மனைவி), 0762477411 (மகள்) ஆகிய இலக்கத்திற்கு அறிவித்து உதவுமாறு தெரிவித்துள்ளனர். (05)












# கறுப்புத் துணி கட்டி கண்டன போராட்டம் முல்லைத்தீவில் நீதிகோரி நேற்று நடந்தது

முல்லைத்தீவு இளைஞர்களின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜாக்கு நீதி கோரி கண்டன போராட்டம் ஒன்று நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டிருந்தது.

திங்கட்கிழமை காலை 10.15 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கறுப்பு துணியால் வாயைக் கட்டியவாறு அமைதியாக கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்ட பின்னர் மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிம் நீதி அமைச்சின் செயலாளருக்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

முல்லைத்தீவில் திட்டமிட்டு நடத்தப்படும் அத்துமீறல் குடியேற்றம் மற்றும் நீதிபதிக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் அத்தோடு இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதாக குறித்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கண்டன போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீதிபதிக்காக நீதி கேட்கும் இந்த நாட்டில் சாதாரண மக்களுக்கு என்ன நீதியோ?, நீதியின் கழுத்தில் தூக்கு கயிறு தீர்த்து போனதா நியாயத்தின் உணர்வு, நீயும் பெண்தானே நீதிகிடைக்காத பெண்களுள் நீயும் ஒருதியோ? நீதி தேவதையே, தொடர்ந்து நடந்தேறும் நீதி புரள்வுகளுக்கு என்ன தீர்ப்பு நீதி அமைச்சே? போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், மதகுருமார், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் இ.ஜெகதீஸ்வரன், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் மற்றும் இளைஞர்கள் கலந்துகொண்டிருந்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# பம்பலப்பிட்டி ரயில் நிலையத்திற்கு ஐந்தே மாதங்களுக்குள் மேம்பாலம்

## ஜனாதிபதி விடுத்துள்ள அதிரடி உத்தரவு



ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் கொழும்பு, பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தில் பழுதடைந்துள்ள மேம்பாலத்தை அகற்றி 10 நாள்களுக்குள் தற்காலிக வீதியை அமைப்பதற்கும் 5 மாதங்களுக்குள் புதிய மேம்பாலம் ஒன்றை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் இந்த செயல்திட்டத்தை முன்னெடுத்துள்ளது. (05)

# யாழில் சந்தேகநபரின் மீது பொலிஸார் துப்பாக்கி சூடு

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபரை பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு, நேற்று (திங்கட்கிழமை) கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி அல்வாய் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்காகி காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில், பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் திருட்டு, வழிப்பறி, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நீதிவான் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

அந்நிலையில் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அண்மையில் இடம்பெற்ற குற்றச்செயலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் குறித்த நபரை பொலிஸார் தேடி வந்தனர்.

அதன் போது அந்நபர் அல்வாய் பகுதியில் பதுங்கியிருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் நபரை கைது செய்ய நடவடிக்கைஎடுத்தபோது, அவரது உறவினர்களான பெண்கள் உள்ளிட்டவர்கள், பொலிஸாரின் நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தனர்.

அதனால் அங்கிருந்து திரும்பிய பொலிஸார் மீண்டும் நேற்று மேலதிக பொலிஸாருடன் அப்பகுதிக்குசென்றுசந்தேகநபரை கைது செய்ய முற்பட்ட வேளை சந்தேக நபர் பொலிஸாரை தாக்கி விட்டுதப்பிசெல்லமுற்பட்டுள்ளார். அத்துடன் உறவினர்களும் அவ்விடத்தில் கூடி பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தனர்.

அவ்வேளை சந்தேகநபர் அங்கிருந்து தப்பி செல்ல முற்பட்ட வேளை பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு கைது செய்துள்ளனர். துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகநபர் காயமடைந்தார்.

அதனை அடுத்து சந்தேகநபரை கைது செய்து, சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பொலிஸார் சேர்த்து , பொலிஸ் பாது காப்பும் வழங்கியுள்ளனர். (05)

# மின் துண்டிப்புக்கு சென்ற ஊழியர்கள் மீது மணல் வியாபாரி உட்படச் சிலர் தாக்குதல்

மதுரங்குளி, முக்குதொடுவா பிரதேசத்தில் மின்சாரத்தை துண்டிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் இருவரை மணல் வர்த்தகர் உட்பட சிலர் கொடூரமாகத் தாக்கியுள்ளனர் என மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான புத்தளம் மின்சார சபை அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் இருவரே மின் இணைப்பை துண்டிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். முக்குதொடுவா பகுதியில் உள்ள மணல் வியாபாரியின் வியாபார இடத்தில் கடந்த ஒரு மாதமாக மின்கட்டணம் செலுத்தாததால் மின்சாரத்தை துண்டித்து விட்டு அங்கிருந்து வெளியேறி திரும்பிச் சென்று கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த இடத்துக்கு மின்சாரத்தை துண்டிக்க சென்ற இரு ஊழியர்களும் மின்சாரம் துண்டிக்கப்படுவதற்கு முன்னர் அங்கிருந்த பெண்ணொருவருக்கு தெரிவித்துவிட்டு மின்சாரத்தை துண்டித்ததாக கூறப்படுகிறது. (05)

# வீடுடைத்து கொள்ளையில் ஈடுபட்ட மூவர் யாழில் கைது

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் வீடு உடைத்து கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் இருவரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றின் உரிமையாளர் குடும்பத்துடன், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்புக்கு சென்றிருந்தார்.

ஒரு சில நாள்கள் மட்டக்களப்பில் உறவினர் வீட்டில் தங்கியிருந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனது வீட்டுக்கு திரும்பிய வேளை வீட்டின் கதவு உடைக்கப்பட்டு, வீட்டில் இருந்த மின் மோட்டார், தொலைக்காட்டி பெட்டி, மடிக்கணனி, கையடக்க தொலைபேசி உள்ளிட்ட பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டு உள்ளமையை அவதானித்துள்ளனர்.

அது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் மற்றும் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த வீட்டில் இருந்து திருடப்பட்ட பொருள்களை மீட்டுள்ளதாகவும், அவற்றின் பெறுமதி சுமார் 07 லட்சம் ரூபா எனவும் தெரிவித்த பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர். (05)

# யாழ். ரயில் நிலையம் அருகில் சடலம் மீட்பு

யாழ்ப்பாண ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பாழடைந்த கட்டடம் ஒன்றிலிருந்து நபர் ஒருவர் நேற்று (திங்கட்கிழமை) சடலமாக மீட்கபட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் அடையாளம் காணப்படாத நிலையில், யாழ்ப்பாண பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

# இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் குறித்து அறிந்து கொள்ள தொலைபேசி இலக்கம்

இஸ்ரேலில் தற்போது நிலவும் மோதல் காரணமாக இலங்கையர்கள் தொடர்பில் அறிந்து கொள்ள இரண்டு விசேட தொலைபேசி இலக்கங்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, 0094716640560 என்ற வட்ஸ்அப் இலக்கம் அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 1989 என்ற தொலைபேசி இலக்கத்துடன் மூலம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் சுமார் 8,000 இலங்கையர்கள் பணிபுரிந்து வருவதுடன், அதில் 90 வீதமானோர் தாதியர் சேவையில் ஈடுப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு இலங்கையர்களின் நிலைமை குறித்து தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார, கேட்டறிந்துள்ளார்.

இலங்கைதொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவுறுத்தியுள்ளார். (05)





# அதிகாலையில் யானை காரைதீவில் அட்டகாசம்

( வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவுப்பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தினம் தினம் அதிகரித்து வருகிறது.

அறுவடையை அடுத்து நேற்று அதிகாலை ஊருக்குள் புகுந்த தனியன் யானை காரைதீவு வயலை அண்டிய பிரதேசத்திலுள்ள களஞ்சியசாலையை துவம்சம் செய்தது. சிரேஸ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் சா.வேல்முருகுவின் களஞ்சிய சாலையிலுள்ள நெல்மூடைகளை யானை பதம் பார்த்தது. இதன்போது மதில்கள் உடைக்கப்பட்டன. தென்னை வாழைகள் துவம்சம் செய்யப்பட்டன.

இவ்வாறு தினமும் யானை மனித மோதல் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயினுடன் இருவர் யாழ்ப்பாணத்தில் கைது

ஹெரோயின்போதைப்பொருளுடன் இரு இளைஞர்கள் ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் செல்வபுரம் பகுதியில் கோப்பாய் பொலிஸார் விசேட நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தனர்.

அதன்போது அப்பகுதியில் நடமாடிய இளைஞர்களை சோதனையிட்ட போது, 24 வயதுடைய இளைஞன் ஒருவரின் உடைமையில் இருந்து 250 மில்லி கிராம் ஹெரோயினும், 22 வயதுடைய மற்றுமொரு இளைஞனின் உடைமையில் இருந்து 150 மில்லி கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளன.

அதனைஅடுத்துஇருவரையும் கைது செய்த பொலிஸார் அவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்துவிசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)



# நாவிதன்வெளியில் களைகட்டிய சர்வதேச ஆசிரியர் தின விழா

( காரைதீவு சகா)

சம்மாந்துறை வலய நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய சர்வதேச ஆசிரியர் தின விழா அதிபர் நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. முன்னதாக நட்சத்திர அதிதியான வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளரும், பாடசாலையின் வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா மற்றும் அதிபர் ஆசிரியர்கள் ஆளுரய பூமாலைகள் சூட்டப்பட்டு பாண்ட் வாத்தியம் சகிதம் வரவேற்கப்பட்டார்கள்.

ஆசிரியர் தின விழா பிரதி அதிபர் பி.ஜெகதீசனின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது . அங்கு, அதிபரின் வழிகாட்டலில் உயர் தரப் பிரிவு பொறுப்பாசிரியர் ந. கோடீஸ்வரனின் நெறிப்படுத்தலில், உயர்தர கலைப் பிரிவு மாணவர்கள் நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக கச்சிதமாக பலத்த கரகோஷத்துடன் மேடை ஏற்றினர். நிறைவில், பிரதம அதிதியான நாவிதன்வெளிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பி. பரமதயாளன் நட்சத்திர அதிதியான வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளரும் பாடசாலையின் வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். 2022ஆம் ஆண்டு குறைவான விடுமுறை பெற்றதிருமதி.சுவானந்திரூபன் ஆசிரியையும், இலட்சுமணன் பரமதேவன் ஆசிரியரும் அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஆசிரியர்களின் நிறைய கலைநிகழ்ச்சிகள் மாணவர்களை குதூகலிக்கச் செய்தன.

கூடவே ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் கொய்யா மரக்கன்றுகளை மாணவர்கள் பரிசளித்து கௌரவித்தனர்.

ஆசிரியர்களின் வில்லுப்பாட்டு நகைச்சுவைபாடல்கள் ஆடல்கள் நாடகங்கள் கவிதைகள் விளையாட்டுகள் என்று மேடை களைகட்டியது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.10.2023இல் வெளியிடப்பெற்றது.